**இலங்கை மின்சார சபை - 2019**

-----------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மின்சார சபையினதும் (சீஈபீ) அதன் துணைக் கம்பனிகளினதும் (குழுமம்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமென நான் கருதும் அவதானிப்புக்களும் கருத்துரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்படுள்ளன. வரையறுத்த எல்ரீஎல் ஹோல்டிங் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள், குறித்த துணைக் கம்பனியின் பணிப்பாளர் சபையால் நியமிக்கப்பட்ட பொதுத் தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் கணக்காய்வு செய்யப்பட்டது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, குழுமத்தினதும் சபையினதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க ஒன்றிணைத்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையினதும் குழுமத்தினதும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு

செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையினதும் குழுமத்தினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபையும் குழுமமும் அவற்றின் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையினதும் குழுமத்தினதும் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு குழுமத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தீகரிக்கப்பட்டுள்ளது.

- சபையினதும் குழுமத்தினதும் செயற்பாடுகளை தொடரச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையினதும் குழுமத்தினதும் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- சபையும் குழுமமும் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சபையினதும் குழுமத்தினதும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 ஒன்றிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் மீது கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புக்கள் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.<br><br>(அ) வரையறுத்த லங்கா கோல் (தனியார்) கம்பனி | | |
| i. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (எல்கேஏஎஸ் 16) பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51 வது பந்தியின் படி, ஒவ்வொரு நிதி ஆண்டு முடிவிலும் சொத்தின் பயனுள்ள வாழ்க்கை காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற் கமைய, முன்னையய மதிப்பீடு களிலிருந்தான எதிர்பார்ப்புகளில் மாற்றமேற்பட்டிருந்தால், அந்த மாற்றங்கள் எல்கேஏஎஸ் 08 இற்கு இணங்க கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும், இன்னும் பயன்பாட்டில் உள்ள முழுமையாக தேய்விடப்பட்ட மோட்டார் வாகனங்களின் பயனுள்ள வாழ்க்கை காலம் மதிப்பாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எல்சீசீ இன் கீழுள்ள முழுமையாகத் தேய்விடப்பட்ட 3 வாகனங்களிற்குமாக ஒரு மீள்மதிப்பீட்டுச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டு தேவையான சீராக்கங்கள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. வருமான வரி தொடர்பான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 12) 88 ஆவது பந்தியின் படி, 2017/2018 மதிப்பீட்டு ஆண்டிற்கான சிக்கன சேவை கட்டணம் (ஈஎஸ்சி) தொடர்பான ரூபா 159,549,619 மதிப்பீடு மற்றும் ரூபா 75,461,644 அபராதங்கள் குறித்த எந்த தகவலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய மொத்த ஈஎஸ்சி ரூபா 579,179,232 ஆகும். முழுமையாகத் திருத்தப்பட்ட 2006 இன் 13 ஆம் | ESC இன் தீர்ப்பனவுக் காலத்தை நீடிக்கக் கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டதுடன் இது தொடர்பாக ஒரு இணக்கப்பாடு ஏற்படும் வரை ESC இன் தீர்ப்பனவு தொடர்பில் கம்பனிக்கு எதிராக எந்தவொரு அறவீட்டு நடவடிக்கையையும் அல்லது எந்தவொரு வரியையும் விதிக்க வேண்டாம் எனவும் கோரப்பட்டுள்ளது. | தண்டத்தினை தவிர்ப்பதற்காக உரிய காலத்தில் பொறுப்புக்களை தீர்த்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இலக்க சிக்கன சேவை கட்டணச் சட்டத்தின் 6 ஆவது பிரிவின் படி, காலாண்டு முடிவடைந்த பின்னர் அடுத்த மாதத்தின் இருபதாம் நாளில் அல்லது அதற்கு முன்னர் ஈஎஸ்சீ வரிப்பொறுப்பு செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், இந்த அறிக்கையின் திகதி வரை கம்பனி தான் செலுத்த வேண்டிய ஈஎஸ்சீ இனை செலுத்தியிருக்கவில்லை. | | |
| iii. | வருமானம் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் (எல்கேஏஎஸ் 18) 14 ஆம் பந்தியின் படி, பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமா னம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவி ல்லை. நிலக்கரியை இறக்குமதி செய்யும் போது, சுங்கத்தின் நோக்கத்திற்கான பெறுமதியை மதிப்பிடுகையில், ஒரு கற்பனை யான சீராக்கமாக சுங்கத்தின் வரி எல்லையில் 10 சதவீதம் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கம்பனி வருவாயில் ரூபா 3,804,035,310 என்ற 10 சதவீத இலாப எல்லையினை சேர்த்து ள்ளதுடன் பின்னர் கம்பனி கடன்பட்டோருக்கான கழிவாக அத்தொகையை வழங்கி அதனை விற்பனை கிரயத்துக்கு சாட்டுதல் செய்துள்ளது. இதன் விளைவாக, விற்பனை கிரயம் மற்றும் வருவாய் என்பன ஒத்த தொகையால் அதிகரித்துக் காட்டப் பட்டிருந்ததுடன் அதன் மீது மேலதிக ஈஎஸ்சீ இனை செலுத்த வேண்டியுள்ளது. | இ.மி.ச. இற்கு விலைப்பட்டியல்களை வழங்குகையில் சுங்கத் தீர்வையினை கிரயத்துடன் சேர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எல்சீசீ இற்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோக த்தர் ஒருவரின் பங்குபற்றலுடன் 2018 ஜூன் 28 அன்று அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து இந்த விலை நிர்ணய முறை பின்பற்றப்பட்டது. இ.மி.ச. இற்கான விலைப்பட்டியலிலுள்ள வெற் வரிக்கான எல்சீசீ இன் பெறுமதி அடிப்படையானது சுங்க நோக்கங்க ளுக்கான பெறுமதியை விட குறைவாக இருக்கக்கூடாது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் உத்தியோக த்தரால் கூறப்பட்டமை பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளது. ஆகையால், 10% தொகை உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தரின் உத்தரவின் பேரிலேயே சேர்க்கப்படுகின்றது. அன்றுமுதல், இ.மி.ச. இந்த உத்தரவை சவால் செய்து, 2018-09-07 திகதிய அதனது கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவித்திருந்த போதிலும், அதற்கான பதில் இன்னும் கிடைக்கவில்லை. அதுவரையிலும் நாங்கள் விலைப்பட்டியலில் 10% சுங்க தீர்வையைச் சேர்த்துள்ளோம். ஆனால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தீர்ப்புக்காக காத்திருக்கப்பட்டுள்ளமையால் மேலதிக வெளியீட்டு வற் தொகை அனுப்பப்படவில்லை. எனவே வருமானம் அதிகரித்துக் கூறப்பட்டமைக்கு இதுவே காரணமாகும். | இலங்கைக் கணக் கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளிற்கு அமைவாக பதிவேடு கள் பேணப்படுதல் வேண்டும். |
| iv. | 2016 செப்தெம்பர் 19 முதல் 2018 ஏப்ரல் 09 வரையிலான கால கட்டத்தில் நிலக்கரி இறக்குமதியின் சரியான கொடு க்கல் வாங்கல் பெறுமதியை வெளிப்படுத்தாமையால் இலங்கை சுங்கத்தால் ரூபா 205,000,000 தொகை தண்டமாக கம்பனிக்கு | இலங்கை சுங்கம் நடத்திய விசாரணையின் படி, 2016.09.19 முதல் 2018.04.09 வரையிலான காலகட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியின் சரியான கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளை லங்கா கோல் கம்பனி அறிவித்திருக்கவில்லை. அக்காலத்தில் அனைத்து சுங்க விடயங்களையும் இலங்கை கப்பல் | சிக்கலுக்கு பொறுப்புவாய்ந்த ஆட்களை இனங்கண்டு சிக்கலை தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| விதிக்கப் பட்டிருந்ததுடன், இயக்குநர்கள் நிதிக்கூற்றுக்களில் கைச்சாத்தி டுவதற்கு முன்னர் 2018 திசெம்பர் 12 ஆந் திகதி இத் தண்டப்பணம் தீர்மானிக்கப் பட்டிருந்தது. கம்பனி இந்த தண்டப்பணத் தொகையில் ரூபா 155,426,118 இனை இலங்கை சுங்கத்தின் வற் கணக்கிற்கும், ரூபா 39,970,418 இனை வற் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் ரூபா 9,603,464 இனை சீஎஸ்சீஎல் பொறுப்புக் கணக்கிற்கும் தவறுதலாக வரவு வைத்திருந்தது. இதன் விளைவாக, செலவினம் ரூபா 205,000,000 ஆல் குறைத்தும் சொத்துக்கள் ரூபா 195,396,536 ஆல் அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 9,603,464 ஆல் குறைத்தும் காண்பிக்கப்பட்டுள்ளன. மேலும், பேரேட்டிலுள்ள வற் தொடர்பில் கம்பனி ரூபா 126,956,898 தொகையினை இ.மி.ச இடமிருந்து பெறவேண்டிய தாகவும் சுங்க வற் இற்கு செலுத்தவேண்டியதாகவும் பதிவுசெய்திருந்தது. இருப்பினும், இந்தப் பெறுமதிகளை மெய்மை யாய்வு செய்வதற்குத் தேவை யான ஆதாரப்படுத்தல் ஆவண ங்கள் மற்றும் தெளிவான காரணங்கள் வழங்கப்பட்டிரு க்கவில்லை. | கூட்டுத்தாபனம் (சி.எஸ்.சி) கையாண்டிருந் ததுடன் அதற்காக ஒரு கப்பலேற்றலுக்கு ரூபா 1,000,000 கட்டணம் வசூலித்திருந்தது. மேற்குறத்த தவறான வெளிப்படுத்தலுக்காக இலங்கைச் சுங்கம் எல்சிசி இற்கு ரூபா 205,000,000 அபராதம் விதித்ததுடன் இலங்கைச் சுங்கத்தின் விசாரணை அதிகாரிகள் எல்சிசி அதிகாரிகளுக்கு இந்த கட்டணத்திற்குப் பிறகு இறுதி வற் கட்டணம் எதனையும் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவித்திருந்தனர்.<br><br>எல்சீசீ ஏற்கனவே சம்பந்தப்பட்ட ஏற்றுமதிகளுக்காக ரூபா 37,594,744 தொகையான வற் இனை செலுத்தி யுள்ளதுடன் நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்கு சுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி ரூபா 205 மில்லியன் தொகையினை இலங்கை சுங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலைக்கு அது தள்ளப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், எல்சீசீ இந்த விடயத்தை வரிசை அமைச்சின் ஊடாக நிதியமைச்சருக்கு தெரிவித்திருந்ததுடன் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட தண்டப்பணச் செலுத்துகையினை தள்ளுபடி செய்யுமாறு கோரியுள்ளது. ஆனால் இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சிஎஸ்சி உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் (நெம்மவட்ட குழு) விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் நிதி அறிக்கைகளில் சரியான விளக்கத்தை தருவதற்காக அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கின்றது. | |
| v. பணிப்பாளர் சபையின் அங்கீ காரத்தைப் பெற்றுக்கொள்ளாது கப்பல் பட்டியல்களைத் தீர்ப்ப தற்கும் மேலே iv இல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்தை செலுத்துவதற்கும் இலங்கை மின்சார சபையிடமிருந்து (சீஈபீ) பெறப்பட்ட நிதியை கம்பனி பயன்படுத்தியிருந்ததுடன் இழப் புகளுக்கு பொறுப்பு வாய்ந்த நபர்களை அடையாளம் காண்ப தற்காக முறையான விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலக்கரி இறக்குமதிகளை விடுவிப்பதற்கு சுங்கம் அனுமதிக்காமையால் இ.மி.ச. வழங்கிய நிதியைப் பயன்படுத்தி எல்சீசீ இக்கொடுப்பனவை மேற்கொண்டுள்ளது. இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சீஎஸ்சீ உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் (நெம்மவட்ட குழு) விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் நிதி அறிக்கைகளில் சரியான விளக்கத்தை தருவதற்காக அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது. | சிக்கலுக்கு பொறுப்புவாய்ந்த ஆட்களை இனங்காண்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| vi. நிலக்கரியினை குறைத்து வழங்கியிருந்தமை தொடர்பில் வரைறுத்த தௌரியன் அயர்ன் என்ட் ஸ்ரீல் (TISCL) கம்பனியிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 539,192,079 தொகை யினை இணங்கப்பட்ட முறையில் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CECL) ஊடாக அறவிடுவதற்கு கம்பனி தேவையான நடவடிக்கைகளை எடுக்காதிருந்ததுடன் TISCL/CECL இந்த மீதியினை உறுதிப்படுத் தியிருக்கவில்லை. அத்துடன், ஏழு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், நட்டக் கடனிற்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்பட் டிருக்கவில்லை. | தௌரியன் அயர்ன் அன்ட் ஸ்ரீல் ஒரு உயர் மட்டக் குழுவால் கையாளப்பட்டது. இக்கடனை ஐயக்கடன் என்று குழு கருத்து தெரிவிக்காததுடன் நிலக்கரியை வழங்குவதன் மூலம் நிலுவைத் தொகையை தீர்ப்பதற்கு கொள்வனவாளர் கூட ஒப்புக் கொண்டுள்ளார். எங்கள் வசம் உள்ள தகவல்களின்படி, அமைச்சரவையால் தீர்மானிப்பதற்காக தீர்வுத்திட்ட முன்மொழி வொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்திடமிருந்து (வரையறுத்த தௌரியன் அயர்ன் அன்ட் ஸ்ரீல் கம்பனி) பெற வேண்டிய நிலுவைத் தொகையின் தற்போதைய நிலை அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தௌரியன் அயர்ன் அன்ட் ஸ்ரீல் கம்பனியுடன் பேச்சுவாரத்தை நடத்துவதற்காக திறைசேரி (தலைவர்), இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம், லக்விஜய மின் உற்பத்தி நிலையம் மற்றும் லங்கா கோல் கம்பனி ஆகியவற்றின் நான்கு உறுப்பினர்களை அமைச்சரவை நியமித்திருந்தது. மேலும், குழுவின் பரிந்துரைகளை துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சு மூலம் மீண்டும் அமைச்சரவையில் சமரப்பிக்க அமைச்சரவை அறிவுறுத்தியுள்ளது. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| vii. முன்னைய ஆண்டின் கணக் காய்வில் மெய்மையாய்வு செய்வதற்கு முடியாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 894,151 கூட்டுத் தொகையான பெறவேண்டிய சிக்கன சேவைக் கட்டணம் (ESC), ரூபா 77,719 தொகையான நிறுத்திவைத்தல் வரி (WHT), ரூபா 65,474,540 தொகையான செலுத்த வேண்டிய வருமான வரி, ரூபா 3,371,326 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி (NBT) மற்றும் ரூபா 12,758,801 ஆன பெறுமதிசேர் வரி (VAT) என்பன முன்னைய ஆண்டிற்கான சீராக்கமாக 2018 இன் நிறுத்தி வைத்த உழைப்புக்களிற்கு எதிராக சாட்டப்பட்டிருந்தன. இருப்பினும், இந்த சீராக்கங்களைத் திருத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கம்பனி தவறியிருந்தது. | **சி.சே.க / பிடித்துவைத்தல் வரி**<br>நீண்டகாலமாக நிலுவையிலுள்ள யதார்த்த மற்ற வரி மீதிகளை பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையிடமிருந்து கிடைத்த அங்கீகாரத்தின் ஒரு பகுதியாக மொத்தம் ரூபா 971,868 தொகையான அறவிடப்பட முடியாத சி.சே.க. மற்றும் பிடித்துவைத்தல் வரி உருவாகியுள்ளன.<br><br>**வருமான வரி**<br>14/15 மற்றும் 13/14 ஆண்டுகளிற்காக நிலுவையாகக் காணப்படும் வருமான வரி முறையே ரூபா 2,049,484 மற்றும் ரூபா 3,590,678 மாத்திரமே என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எழுத்துப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. எனவே, 2018.07.26 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இனிமேல் செலுத்துவதற்குத் தேவையற்றதாகவுள்ள ரூபா 11,703,151 வரி சீராக்கப்பட்டது.<br><br>வருமான வரிக்கு மேலும் ரூபா 65,474,540 ஆன மேலதிக வரி ஏற்பாடு காணப்படுகின்றது. மேலே குறிப்பிடப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எழுத்துப்பூர்வமான உறுதிப்படுத்தலின் படி, | நீண்டகாலமாக நிலுவையிலுள்ள மீதிகள் தொடர்பில் சரியான பரிகாரம் மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இந்த வரியும் இனிமேல் தேவையற்றதாகவுள்ளது. ஆகையால், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் எழுத்துப் பூர்வமான உறுதிப்படுத்தலின் படி செலுத்த வேண்டிய வரியிலிருந்து மேலதிக ஏற்பாடு கழிக்கப்பட்டுள்ளது.<br><br>**தே.க.வ.**<br>கடந்த காலத்தில் கம்பனி செலுத்திய தே.க.வரி பெறத்தக்கதாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் அது ரூபா 3,371,326 ஆக இருந்தது. எல்சிசி ஒரு இறக்குமதியாளராகவும் நிலக்கரி வர்த்தகராகவும் இருப்பதால் தே.க.வ. இற்கு செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெறும் உரிமை அதற்கு இல்லை. எனவே, மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகையை ஐந்தொகையில் சீராக்குவதற்கு 2018.07.26 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது.<br><br>**வற் வரி**<br>2017 ஆம் ஆண்டின் இறுதியில் பெறத்தக்கதாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 12,758,801 உள்ளீட்டு வற் வரியானது சரியான நிலையை பிரதிபலிக்கும் வகையில் சீராக்கப்பட்டது. உள்ளீட்டு வற் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான சாத்தியத்தை விசாரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நாங்கள் கடிதம் எழுதியுள்ளோம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அதன் 2018.06.14 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க வற் சட்டத்தின் பிரிவு 22(5) இன் படி நிறுவனம் செலுத்திய உள்ளீட்டு வற் இனை திரும்பப் பெறப்பட முடியாது என விளக்கமளித்துள்ளது. இதன்படி, 2018.07.26 இல் நடைபெற்ற கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்ற பின்னர் மேற்குறித்த பெறத்தக்க தொகை சீராக்கப்பட்டது. | |
| viii. இலகுக்கட்டண வற் (lightering VAT கப்பலேற்றல் இலக்கம் 151 முதல் 154) தொடர்பில் இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்டு இலங்கை கப்பற் கூட்டுத்தாபனக் கம்பனிக்குச் (CSCL) செலுத்தப் படவேண்டிய ரூபா 15,870,104 தொகை CSCL இற்குச் செலுத்தப்பட்டோ அல்லது இ.மி.ச. இடமிருந்து கிடைத்த | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இலகுக் கட்டணத்திற்காக 0% வற் வரியினை நிர்ணயித்திருந்தமையால் இல. 151 முதல் 154 வரையான கப்பலேற்றலுக்குரிய ரூபா 15,870,104.32 இலகுக் கட்டணத்தின் மீதான வற் இனை எல்சிசி சீஎஸ்சீ இற்குச் செலுத்தவில்லை. கிடைத்திருந்த இத்தொகை 124 முதல் 142 வரையிலான 11 கப்பலேற்றலுக்குரிய இறுதி வற் மதிப்பீட்டைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இது தொடர்பாக 2020 | இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களிற்காக சரியான கணக்கீட்டுத் தீர்வை பிரயோகித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முற்பணமாகவோ காட்டப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேற்படி இலகுக் கட்டணத்தை தீர்ப்பதற்காக இ.மி.ச இடமிருந்து தேவையான நிதியினை கம்பனி பெற்றுக்கொண்டிருந்த போதிலும், CSCL இற்குச் செலுத்த வேண்டிய தொகையாக அதனை கம்பனி கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஆம் ஆண்டில் செலவுத் தாள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. | |
| ix. ரூபா 1,109,063 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகள், ரூபா 180,416,885 தொகையான இ.மி.ச இடமிருந்து பெறவேண்டிய இறுதி வாட் மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகள், இ.மி.ச இடமிருந்து பெறவேண்டிய ரூபா 578,678,686 தொகையான ஈ.எஸ்.சீ, இ.மி.ச இற்குச் செலுத்த வேண்டிய ரூபா 6,813,692, வரையறுத்த இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் - பழைய கட்டணம் ரூபா. 28,347,444, ரூபா 18,075,801 தொகையான இ.மி.ச இடமிருந்து பெறத்தக்க ரூபா 4,677,509, ரூபா 7,750,000 தொகைான நீராவி நிலக்கரி வியாபாரக் கடன்பட்டோர் (சீஈபீ), ரூபா 1,760,500 தொகையான இ.மி.ச இலிருந்து பெறத்தக்க ஏனையவைகள், நோபல் ரிசோர்சஸ் இன்டர் நேஷனல் பிரைவேட் லிமிடெட் இடமிருந்து பெறத்தக்க ரூபா 1,115,987 மற்றும் வியாபாரக் கடன் கொடுத்தோர் - நோபல் ரிசோர்சஸ் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் ரூபா 85,887,776 என்பவற்றை மெய்மையாய்வு செய்வதற்குத் தேவையான மீதி உறுதிப்ப டுத்தல்கள் மற்றும் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | **செலுத்த வேண்டிய கணக்குகள் ரூபா 1,109,063**<br><br>நிலுவைத் தொகை 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்<br><br>**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை மற்றும் இறுதி வெற்: ரூபா 180,416,885**<br><br>123 முதல் 155 வரையிலான கப்பலேற்றல்களின் இறுதி வற் மற்றும் பரிமாற்ற இழப்புக்கான பெறத்தக்க தொகை இதுவாவதுடன் இது இலங்கை சுங்கத்திற்கு செய்யப்பட்ட ரூபா 205 மில்லியன் கட்டணத்துடன் தொடர்புடையது. இந்த விவகாரம் இ.மி.ச. மற்றும் சீஎஸ்சீ உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கப்படுன்கிறது. மேற்குறித்த அறிக்கைக்கு அமைய பதிவுகள் மேற்கொள்ளப்படும்.<br><br>**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய சி.சே.க. : ரூபா 578,678,686**<br><br>சி.சே.க. இனை தீர்ப்பதற்கான காலநீடிப்பு கோரி உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு கடிதமென்று அனுப்பப்பட்டுள்ளது.<br><br>**இ.மி.ச. க்கு செலுத்த வேண்டியது: ரூபா 6,813,692**<br><br>நடுவர் மாதிரி சான்றிதழ்களின் முரண்பாடு காரணமாக டிரா/பிகுரா கப்பலேற்றல்கள் மீதான தொடர்புடைய செலவுகள் மற்றும் விலைக் குறைப்பைக் கழித்த பின்னர் டிரா/பிகுரா இடமிருந்து கோரப்பட்ட தாமதக் கட்டணத் தொகையே இந்த மீதியாகும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக் களின் உளதாந்தன்மையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக் காய்விற்கு கிடைக் கக்கூடியதாக இருத்தல் வேண்டும். |

**வரைறுத்த இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் - பழைய கட்டணம் ரூபா 28,347,444**

இந்த மீதி வரையறுத்த இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தினால் (சீஎஸ்சீ) உறுதிப் படுத்தப்பட்டதுடன் எல்.சீ.சீ ஏற்கனவே இருப்புக் காப்புறுதிக் கொடுப்பனவுகளின் விலைப்பட்டியல் மற்றும் பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பித்திருப்பதால் திருத்தும் பதிவுகளை சீஎஸ்சீ மேற்கொள்ளுதல் வேண்டும்.

**நானாவிதக் கடன்பட்டோர் ரூபா 18,075,802**

ஆரம்ப விசாரணையில் இந்த தொகை சுங்கத்திற்கு மேலதிகமாகச் செலுத்திய கட்டணம் என்பது தெரியவந்தது. இருப்பினும், சரியான பெறத்தக்க மீதியினை இனங்காண்பதற்காக மேலதிக பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டியவை ரூபா 4,674,041**

மீதியின் தன்மை விசாரிக்கப்பட்டு அதற்கேற்ப சரி செய்யப்படும்.

**வர்த்தகக் கடன்பட்டோர் (இ.மி.ச.) நீராவி நிலக்கரி ரூபா 7,750,000**

இந்த மீதி மேர்கடர் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்ட கட்டணத்தைக் உள்ள டக்குகின்றது. இந்த விடயம் இ.மி.ச. மற்றும் சீஎஸ்சீ உடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் இரண்டு செயலாளர்களால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவினால் **(நெம்மவட்ட குழு)** விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் அவர்களின் அறிக்கைக்காக காத்திருக்கின்றது.

**இ.மி.ச. இடமிருந்து பெறவேண்டிய ஏனையவை - ரூபா 1,760,500**

மீதியின் தன்மை எதிர்காலத்தில் ஆராயப்பட்டு அதற்கேற்ப சரிசெய்யப்படும்

**வியாபாரக் கடன்கொடுத்தோர் - நொபல் ரிசோர்ஸஸ் ரூபா 85,887,776**

நாணயக் கடிதத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்திருந்தமையால் நொபல் ரிசோர்ஸஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் இனால் குறைவாகப் பற்றிய தொகையினை பிரதானமாக இந்தி மீதி கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | **நொபல் ரிசோர்ஸஸ் இடமிருந்து பெறவேண்டியவை - ரூபா 1,115,987**<br><br>நொபல் ரிசோர்ஸஸ் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிடட் இன் ரூபா 85,887,776 கடன்கொடுத்தோருக்கு எதிராக இந்த மீதி எதிரீடு செய்யப்படும். | |
| x. மீளளிக்கப்பட வேண்டிய செலவினம் மீதான ரூபா 8,280,994 தொகையான செலுத்த வேண்டிய வெற் ஆனது வற் கட்டுப்பாட்டு கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, வற் பொறுப்பு ஒத்த தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாவின் படி, இவை எல்சீசீ இன் பட்டியல்களிற்காக மீளளிக்கப்பட வேண்டிய தொகையாகும். எங்கள் சேவைகளுக்கு எந்த எல்லையும் சேர்க்கப்படவில்லை. எங்கள் வரி ஆலோசகரின் ஆலோசனையின் படி, செலவினங்களை மீளளிப்பது வற் வரிக்கு பொறுப்புடையதாகாது. | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| xi. குறித்த வழங்குனருக்கு அல்லது CSCL இற்கு செலுத்த வேண்மேன்ற கணக்கொன்று பேரேட்டில் இல்லாத போதிலும், CSCL இன் ஊடாக அந்த வழங்குனருக்கு ரூபா 4,000,000 தொகையை கம்பனி செலுத்தியிருந்தது. இருப்பினும், கம்பனி இந்த தொகையை CSCL இற்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையிலிருந்து தவறாகக் கழித்திருந்தது. எனவே, பொறுப்புக்கள் இதனையொத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டுள்ளன. | மீதியின் தன்மை எதிர்காலத்தில் ஆராயப்பட்டு அதற்கேற்ப சரிசெய்யப்படும். | சரியான கணக்கீட்டுப் பரிகாரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். |
| xii. சுங்கத் திணைக்களத்தின் படி உண்மையான வற் ரூபா 106,969,404 ஆன போதிலும், கப்பலேற்றல் இலக்கம் 123 இற்கான சுங்க வெற் ஆக கம்பனி ரூபா 136,236,370 தொகையை செலுத்தியிருந்தது. எனவே, மேலதிகமாகச் செலுத்திய வற் தொகை ரூபா 29,266,965 ஆனதுடன் நிதிக் கூற்றுக்களில் இத்தொகை ரூபா 26,507,084 பெறத்தக்க வற் என காண்பிக்கப்பட்டிருந்தது. எனவே, கணக்காய்வில் இந்த இரண்டு மீதிகளிற்கும் இடையே ரூபா 2,759,882 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | மீதியானது 2020 ஆம் நிதி ஆண்டில் சரிசெய்யப்பட்டுள்ளது. | சரியான கணக்கீட்டுப் பரிகாரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| xiii. கம்பனி CSCL இற்குச் செலுத்த வேண்டிய கணக்கில் ரூபா 5,218,271 தொகையினை வரவு வைத்திருந்தது. இருப்பினும், இந்த தொகையை மெய்மை யாய்வு செயவ்தற்கான ஆதாரப் படுத்தும் ஆவணங்கள் மற்றும் காரணங்கள் வரையறுத்த லங்கா கோல் (தனியார்) கம்பனி மற்றும் CSCL தள்ளுபடி கணக்கு ஆகியவற்றின் மீதிகளுக்கு இடையே காணப்பட்ட ரூபா 31,916,562 வேறுபாட்டை கம்பனி கணக்கிணக்கம் செய்திருக்கவில்லை. | தேவையான பதிவுகள் 2020 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்கள் காலத்திற்குக் காலம் இனங்காணப்பட்டு அதன்படி தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| xiv. வரி செலுத்தாமை காரணமாக ரூபா 500,546 சிக்கன சேவை கட்டணம் (ஈஎஸ்சி), ரூபா 10,134,113 தேசத்தை கட்டியெழுப்பல் வரி (என்பிடி) மற்றும் ரூபா 1,900,938 பெறுமதின பெறுமதிசேர் வரி (வற்) ஆகிய அபராதத் தொகைகளை 2018 சனவரி 04 திகதிய கடிதத்தின் மூலம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விதித்திருந்ததுடன் இதனை செலுத்த வேண்டிய அபராதத் தொகையாக காண்பிக்காது செலுத்த வேண்டிய வரியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தண்டப்பணத்தை அகற்றிக் கொள்வதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல் மேற்கொள் ளப்படும். | சரியான கணக்கீட்டுப் பரிகாரம் பிரயோ கிக்கப்படுவதுடன் ஏதேனும் தண்டங் களை தவிர்ப்பத ற்காக முறைமை உருவாக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) வரையறுத்த ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (தனியார்) இன் நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் விடயங்கள் உள்ளடங்கலாக பிரதானமாக இலங்கை கணக்கீட்டு நியமங்க ளுடன் இணங்கி ஒழுகியிருக்கா மையின் காரணமாக என்னால் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது. | இந்த இலங்கை கணக்கீட்டு நியமங்களிலுள்ள சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு 2020 ஆம் ஆண்டு முதல் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியமத்தின் தேவைப்பாட்டுடன் இணங்குதல் வேண்டும். |
| i. பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.<br><br>- எஸ்.எல்.எப்.ஆர்.எஸ் 07 பந்திகள் 08, 31, 33<br>- எஸ்.எல்.எப்.ஆர்.எஸ் 15 பந்தி 01<br>- எல்.கே.ஏ.எஸ் 01 பந்திகள் 79, 113, 117 | | |

| | | |
|---|---|---|
| - எல்.கே.ஏ.எஸ் 02 பந்தி 37<br>- எல்.கே.ஏ.எஸ் 07 பந்தி 20<br>- எல்.கே.ஏ.எஸ் 12 பந்தி 80 (அ)<br>- எல்.கே.ஏ.எஸ் 19 பந்திகள் 57, 140, 141<br>- எல்.கே.ஏ.எஸ் 24 பந்தி 17<br>- எல்.கே.ஏ.எஸ் 38 பந்திகள் 118 (அ, ஆ) | | |
| ii. 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சிக்கன சேவை கட்டணச் சட்டத்தின் பிரிவு 2 (2) (திருத்தப்பட்ட) இன் படி, ஒரு நிறுவனத்தின் விற்பனை காலாண்டில் ரூபா 12.5 மில்லியனைத் தாண்டியிருப்பின் (காலாண்டுக்கான எல்லை) சிக்கன சேவை கட்டணத்திற்கு கடப்பாடுடையது. கம்பனியின் விற்பனைப் புரள்வு ரூபா 396 மில்லியன் (மொத்த விற்பனை) ஆகும். இருப்பினும், கம்பனி 2019 ஆம் ஆண்டிற்கான சிக்கன சேவை கட்டணத்தை செலுத்தியிருக்கவில்லை, எனவே ESC பொறுப்பு ரூபா 1,983,064 ஆல் குறைத்துக் கூறப்பட்டுள்ளது. | வரையறுத்த ஸ்ரீலங்கா எனர்ஜீஸ் (தனியார்) எதிர்காலத்தில் இதனை பின்பற்றும். | கம்பனி சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |
| iii. முகாமைத்துவக் கட்டணம் எதனையும் விதிக்காது கம்பனியின் பதவியணியினர் அதன் துணைக் கம்பனிகளின் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருந்தனர். ஆகையால், ரூபா 24,847,325 தொகையான குழுமத்தின் பதவியணியினர் செலவினம் தவறாக கம்பனியின் செலவினமாக கருதப்பட்டிருந்தது. | துணைக் கம்பனிகள் நடப்பாண்டில் போதியளவு மிகையினை உருவாக்கியிருக்காமையால், முகாமைத்துவக் கட்டணத்தை சாட்டுவதற்கான நிலைமை காணப்படவில்லை என்பதுடன் 2020 ஆம் நிதியாண்டிலிருந்து இது பின்பற்றப்படும். | துணைக் கம்பனிகள் சார்பாக கம்பனி மேற்கொண்ட செலவினம் மீள்நிரப்பப்படுதல் வேண்டும். |

### 1.5.2 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட திருகோணமலை மின்வலுக் கம்பனியின் (ரீபிசீஎல்) கணக்காய்வாளர், நிதிக்கூற்றுக்கள் மீது பின்வரும் கருத்திலெடுக்க வேண்டிய விடயங்களை சுட்டிக் காண்பித்திருந்தார்.<br><br>சம்பூரில் 500 மெகா வாற்ஸ் நிலக்கரி மின்வலுப் பொறியை அபிவிருத்தி | 50 மெகாவாட் சூரியசக்தி மற்றும் 500 மெகாவாட் எல்.என்.ஜி மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமையால், 50 மெகாவாட் சூரியசக்தி மின்வலுச் செயற்திட்டத்திற்காக சாம்பூரில் ஒதுக்கப்பட்ட இடத்தைப் பயன்படுத்துவதற்கு டிபிசிஎல் தீர்மானித்தது. கடந்த காலங்களில் நடைபெற்ற டிபிசிஎல் இன் | மின்வலு மற்றும் அவசர மின்வலுக் கொள்வனவுக் குறைபாடுகளை இழிவுபடுத்துவதற்காக புதிய பிரேரணைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செய்யும் ஒரே நோக்கில் செயற்பட்ட இக்கம்பனி, அதன் மின்வலுப் பொறியின் அபிவிருத்தி நடவடிக்கை களை கைவிட்டிருந்ததுடன் முன்னர் மூலதனமாக்கப்பட்ட செலவினங்கள் 2018 ஆம் ஆண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தன. அதற்குப் பதிலாக, சம்பூரில் நிலக்கரி மின்வலுப் பொறியை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட அதே காணியில் ரீபிசீஎல் ஆல் 50 மெகா வாற்ஸ் சூரிய மின்வலுப் பொறியை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீ காரம் பெறப்பட்டிருந்தது. மேலும் கரவலப்பிட்டியவில் 500 மெகா வாற்ஸ் எல்என்ஜீ மின்வலுப் பொறியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச் சரவை அங்கீகாரம் வழங்கப்பட் டிருந்தது. இருப்பினும், மேற்படி மின்வலுப் பொறிகளின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் எவ்வித முன்னே ற்றமும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதற்கிணங்க, தொடர்ந் தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படு கின்றமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் இந்த விடயம் தொடர்ந்து விவாதிக்கப்பட்டதுடன் தற்போது டிபிசிஎல் இல் சூரியசக்தி திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு டிபிசிஎல் இன் அமைப்பு அகவிதியை திருத்துவதற்கு பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளது. சூரியசக்தி திட்டத்தை தொடங்குவதற்காக இ.மி.ச. இற்கும் இந்தியாவின் நெஷனல் தெர்மல் பவர் கம்பெனி லிமிடெட் (என்.டி.பி.சி) இற்கும் இடையே கூட்டு முயற்சியில் கையெழுத்திட தேவையான நடவடிக்கைகளை 2020 இல் டிபிசிஎல் இன் பணிப்பாளர் சபை மேற்கொள்ளவிருந்தது. எவ்வாறாயினும், கூட்டு முயற்சி உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டமா அதிபரிடமிருந்து தேவையான சட்ட விளக்கங்கள் பெறப்படுதல் வேண்டும்.

இ.மி.ச. இற்கும் என்டிபிசீ இற்கும் இடையிலான தொடர்ச்சியான கலந்துரை யாடல்களுக்குப் பின்னர், இரு கட்சிகளும் 2019 ஒக்தோபர் 25 ஆம் திகதி கெரவலப்பிட்டியில் உள்ள எல்என்ஜி மின்நிலையத்தை மேம்படுத்துவதற்காக கூட்டு முயற்சியில் கையெழுத்திட்டன.

கொவிட் 19 இன் தாக்கம் காரணமாக கலந்துரையாடல்களின் செயல்முன்னேற்றம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், எதிர்காலத்தில் முன்மொழியப்பட்ட திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிபிசீஎல் இன் பணிப்பாளர் சபை கருதுகிறது.

### 1.5.3 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| தொடர்புடைய உரிய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) எல்கேஏஎஸ் 1– நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | | |
| (i) தபால் அலுவலக (பிஓஎஸ்) கருமபீடக் கட்டணம் மற்றும் தபால் அலுவலக தரகு தொடர்பான கடன்கொடுத்தோருக்கு எதிராக ரூபா 30,609,836 கடன்பட்டோரை சபை எதிரீடு செய்திருந்தது. இதன் விளைவாக, சில்லறைக் கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது. | நியமத்தின் தேவை ப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்கு வழங்கிய ரூபா 1,262,503,405 கடன் தொகை, குறிப்பு இல. 24.2.1 இல் காற்றாலை மின்வலு செயற்திட்டத்திற்கு வழங்கிய கடனாகக் காட்டப்பட்டுள்ளது. | தவறுதலாக மேற்கொள்ளப்பட்ட பதிவு 2020 இல் திருத்தப்பட்டது. | பாவனையாளர்களிற்கு சரியான தகவல்களை வழங்குவதற்காக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (iii) ரூபா 83 பில்லியன் பெறப்பட்ட கடன்களுக்காக செலுத்திய ரூபா 25 மில்லியன் கடன் செயன்முறைப்படுத்தல் கட்டணத்தை, நிதிச் செலவாக காண்பிப்பதற்குப் பதிலாக நிர்வாக செலவினங்களின் கீழ் ஏனைய செலவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | செலவின வகைப்படுத்தல் திருத்தம் தாக்கமுற்றுள்ளது. | சரியான செலவின வகைப்படுத்தல் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். |
| **(ஆ) எல்கேஏஎஸ் 2 - இருப்புக்கள் மற்றும் எல்கேஏஎஸ் 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | | |
| இ.மி.ச ஆனது அதனுடைய மூலதன மற்றும் பராமரிப்பு வேலைகளிற்காக ஏற்பட்ட ஊழியர், மூலப்பொருள் மற்றும் மேந்தலைக் கிரயங்களை பெறுமதியிடுவதற்காக மேற்படி நியமங்களிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் உண்மைக் கிரயங்களை பிரயோகிப்பதற்குப் பதிலாக நியமக் கிரய முறையை பிரயோகிக்கின்றது. இதன் விளைவாக, அவற்றின் மீது ஏற்பட்ட ரூபா 6,409,494,526 கூட்டுத்தொகையான சாதகமான மூலப்பொருள் விலை முரணும் ஊழியர் மற்றும் மேந்தலை விகித முரண்களும் மற்றும் ரூபா 2,428,128,229 தொகையான சாதகமற்ற களஞ்சிய விலை முரணும் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன.<br><br>இதன் விளைவாக, இ.மி.ச இன் செயற்பாட்டு விளைவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமை மூலதனம் என்பன அந்த மூலதன வேலைகள் தொடர்பில் உயர் நிதிசார் ஈடுபடுத்தல் காரணமாக குறிப்பிடத் தக்களவு பாதிக்கப்பட்டிருந்தன. எனினும் அம்மூலதன வேலைகள் தொடர்பில் தேவையான தகவல்கள் காணப்படாததன் காரணமாக அது தொடர்பான நிதிக்கூற்றுக்களிற்கான தாக்கத்தை கணக்காய்வின் போது மதிப்பிட முடியாதிருந்தது. | எல்கேஏஎஸ் - 2 இன் 21 ஆம் பந்தியின் இன் படி இருப்பினை அளவிடுவதற்காக நியமக் கிரய முறை பரிந்துரைக்கப்படுகின்றது. அதன்படி, உண்மையான கிரயத்தினைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை சிக்கல் காரணமாக இருப்புக்கள், முடிவுறாவேலை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மதிப்பிடுவதற்கு நியம விலைகளை இ.மி.ச. பயன்படுத்துகிறது. இருப்புக்களின் நியம விலைகளைத் தீர்மானிக்க அமைக்கப்பட்ட குழு, உண்மையான விலைகளுக்கு மிக அண்மித்த, துல்லியமான மற்றும் நியாயமான மதிப்பீட்டைக் கண்டறிவதற்கு கடுமையாக செயற்ப டுகிறது. இருப்பினும் தொழில்நுட்பத்தின் சிக்கலான தன்மை மற்றும் பாரியளவு இருப்பு காரணமாக, உண்மையான மற்றும் நியம விலைகளுக்கு இடையில் இடைவெளி உள்ளது. ஒருங்கிணைந்த கணக்கீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டவுடன் இந்த விடயம் தீர்க்கப்படும்.<br><br>நியம விலைகளிற்கும் உண்மையான விலைகளுக்கும் இடையிலான இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு இ.மி.ச. பின்வரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. | இருப்பை பெறுமதியிடுகையில் உண்மைக் கிரய அல்லது அண்ணளவான கிரய அடிப்படை பிரயோகிக்கப்படுதல் வேண்டும். |

- DD 4 மற்றும் DD 3 இன் ஊழிய வீத முரண் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கப்பட்டது. ஏனைய இரண்டு பிரிவுகளிலும் 2020 ஆம் ஆண்டில் இதனைச் செய்ய முடியும்.

- நியமிக்கப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட இருப்பு மதிப்பீட்டிற்கான நிறையளித்த சராசரி முறையைத் பின்பற்றுவதன் மூலம், நிதிக் கூற்றுக்களிற்கான பொருள் விலை முரண்களின் தாக்கத்தை அகற்ற முடியும். இது தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற ஈஆர்பி முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள மையால், ஈஆர்பி முறைமை நடைமுறைக்கு வந்தவுடன் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும்.

நடைபெறும் வேலையிலிருந்து மாற்றப்படுகின்ற விநியோக சொத்துக்களைத் தவிர ஏனைய அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (நிலம், கட்டிடம், மோட்டார் வாகனம், இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) எல்கேஏஎஸ் பரிந்துரைகளுக்கு இணங்க நியமக் கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

**(இ) எல்கேஏஎஸ் 8 – கணக்கீட்டுக் கொள்கைள், கணக்கீட்டு மதிப்பீடு களிலுள்ள மாற்றங்கள் மற்றும் தவறுகள்**

இ.மி.ச. ஆல் தொடர்ச்சியாக பயன்படுத் தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பி டப்பட்டவாறு மீளாய்வு செய்யப்பட்டி ருக்கவில்லை. உதாரணச் சந்தர்ப்ப மொன்றாக, ரூபா 32,241,176,427 மற்றும் ரூபா 3,918,235,311 கிரயமான முழமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட முறையே நான்கு மின்வலு நிலையங்கள் மற்றும் 1,683 மோட்டார் வாகனங்கள் என்பன அவற்றின் உள்ளபடியான ஆயுட்காலம் மீள் மதிப்பீடு செய்யப்படாமல் தற்போதும் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

**(i) ரூபா 3,918,235,311 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட 1,683 மோட்டார் வாகனங்கள்**

மோட்டார் வாகனங்களின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்து பிரிவு களிலிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு இடம்பெற்று வருகின்றது. திருத்தப்பட்ட பயனுள்ள ஆயுட் காலத்தை 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பதிவு செய்வதற்கு பரிந்துரைக்கப்படக் கூடியதாக இருக்கும்.

**(ii) ரூபா 32,241,176,427 கிரயமான முழுமையாகத் தேய்விடப்பட்ட நான்கு மின் நிலையங்கள்**

பிறப்பாக்கப் பிரிவின் மின்வலு பொறிகள் தனித்துவமானவையும் சிக்கலான வையுமாகும். மின்பிறப்பாக்கிகளின் பொருளாதார

சீஈபீயால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்விடப் பட்ட நடைமுறை யல்லாச் சொத்து க்களின் பயன்தரு ஆயுட்காலம் கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டவாறு மீளாய்வு செய்யப்ப டுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| | ஆயுட்காலம் மூல உற்பத்தியாளரின் பரிந்துரையின் அடிப்படையில் பெறப்பட்டுள்ளது. மின் உற்பத்தி நிலையங்களின் பொருளாதார ஆயுட்காலம் குறித்து மறுபரிசீலனை செய்ய ஒரு குழு நியமிக்கப்படும். இ.மி.ச. இன் சிறந்த பராமரிப்பின் காரணமாக, மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் மின் பிறப்பாக்கிகள் என்பன மூல உற்பத்தியாளரின் (OEM) எதிர் பார்க்கப்படும் ஆயுட்காலத்தையும் தாண்டி இயங்குகின்றன. | |

**(ஈ) LKAS 16 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| | | |
|---|---|---|
| பரிமாற்றல் பிரிவிலுள்ள ரூபா 172,019,335,924 தொகையான நிலையான சொத்துக்கள் மீளாய் வாண்டில் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக் கவில்லை. | பரிமாற்றல் பிரிவிலுள்ள நிலையான சொத்துக்களை பௌதீக ரீதியில் மெய்மையாய்வு செய்வதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | LKAS 16 இன் பிரகாரம் நிலை யான சொத்துக்கள் பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 3,535,799,151 வரவு மீதி (இருப்பு பற்றாக்குறை) மற்றும் ரூபா 90,343,073 செலவு மீதி (இருப்பு மிகை) என்பன தீர்வு செய்யப்படாமல் ஒரு ஆண்டிற்கு மேலாக இருப்பு சீராக்கல் கணக்கில் காணப்பட்டது. | சாத்தியமான இருப்புச் சீராக்கல் கணக்குகளை 2020 இல் அகற்றுவதற்கு குறித்த பிரிவுகள் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏனைய பற்றாக்குறை மீதிகள் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட பின்னர் அகற்றப்படும். | இருப்பு மிகை மற்றும் பற்றாக்குறையினை அது இடம்பெற்று குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) அமைச்சரவையின் 10/2434/423/034 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் லக்விஜயா மின்வலு பொறியினை நிர்மாணத்திற்காக பெறப்பட்ட ரூபா 159,184,187,965 கடன் தொகை மற்றும் அதன் மீதான வட்டியை பொதுத் திறைசேரிக்கு இ.மி.ச மீளச் செலுத்த வேண்டும். எனினும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அக் கடனிற்கான வட்டியாக 2018 திசெம்பர் 31 வரை ரூபா 25,247,801,891 தொகையை கடன ளிக்கும் வங்கிக்கு செலுத்தியிருந்த போதிலும் இ.மி.ச அதன் கணக்குகளில் மேற்படி | பிரதானமாக இ.மி.ச. இன் திரவத்தன்மை நிலையினைக் கருத்திற் கொண்டு 2018 ஆம் ஆண்டு வரையான மீளளித்தல்கள் பொதுத் திறைசேரியினால் உள்வாங்கப்பட்டது. இருப்பினும், பொது முயற்சிகள் திணை க்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர் களது வழிகாட்டுதலின்படி, 2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியினால் மேற் கொள்ளப்பட்ட ரூபா 3,556,442,931.30 தொகையான வட்டிக் கொடுப்பனவு இ.மி.ச. இன் புத்தகங்களில் சீராக்கப்பட்டது. மேலும், பொது முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு 2020 ஆம் ஆண்டு முதல் சீராக்கல்களை செய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | திறைசேரிச் செயற்பா டுகள் திணைக்களத்தி டமிருந்து எழுத்து மூலமான பணிப்புரை கிடைத்தவுடன் அல் லது நிலுவையான மீதிகளைச் செலுத்து வதற்காக இ.மி.ச இன் புத்தகங்களைச் சீராக்கு வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொடுப்பனவை செலுத்தியோ அல்லது அதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டோ இருக்கவில்லை. இதன் விளைவாக, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 25,247,801,891 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (இ) பொதுத் திறைசேரியின் PED/1/CEB/2/11(i) ஆம் இலக்க கடிதத்தின் கோரிக்கைக்கு அமைய, 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி உரிமை மூலதனத்துவத்திற்கு பதிவுசெய்யப் பட்டிருந்த ரூபா 3,556,442,931 தொகை மீளாய்வாண்டில் வட்டி செலவாக வருமானக் கூற்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும், இந்த தொகை இ.மி.ச ஆல் செலவிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, சபையின் நட்டம் அந்தத் தொகையால் அதிகரித்துக் காட்டப் பட்டிருந்தது. | எல்கேஏஎஸ் 23 இன் (கடன் எடுத்தல் கிரயம்) பிரகாரம், சொத்துக்களை வணிகமயமாக்கிய பின்னர் ஏற்பட்டுள்ள ரூபா 3,556,442,931.30 ஐ மூலதன மாக்க முடியாது. அதன்படி, 2019 ஆம் ஆண்டுக்காக திறைசேரியினால் செலுத் தப்பட்ட வட்டி வருமானக் கூற்றுக்கு சாட்டப்பட்டது. எனவே கணக்கீட்டு நியமத்தின் படி, சபையின் நட்டம் அதிகரித்துக் காட்டப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் செயற்பாட்டிற்காக மேற்கொள்ளப்படாத செலவினத்தை கருத்திலெடுத்தல் கூடாது. |
| (ஈ) இ.மி.ச ஆல் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் சார்பில் இ.மி.ச இனால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 41,816,475 தொகையான செலவினங்கள் மீள அறவிடப்படாமல் இ.மி.ச இன் செலவினங்களாக கருதப்பட்டிருந்ததால் மீளாய் வாண்டிற்கான நட்டம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2003.12.31 ஆந் திகதிய 1321/18 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப் பட்ட சேமலாப விதிகளின் 20(i) ஆம் விதியின் பிரகாரம், சபையால் காலத்திற்குக் காலம் முடிவு செய்யப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்து, முதலீடுகளை கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் நேரடியாக தொடர்புபடுகின்ற செலவினங்கள் உட்பட ஊழியர் சேமலாப நிதியத்தின் நிர்வாக மற்றும் முகாமைத்துவச் செலவினம் நிதியத்தின் செலவினமாக சாட்டப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>ஆகையால், ஊழியர் சேமலாப நிதியத்தின் ரூபா 41,421,524.00 செலவினத்தை இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் காட்டுவது மேலே கூறப்பட்ட இ.மி.ச. சேமலாப நிதியத்தின் விதிகளுக்கு அமைவா கவே உள்ளது. ஆனபடியால், இ.மி.ச. இன் நிதிக் கூற்றுக்களில் அந்த செலவினத்தை பெற வேண்டிய வைகளாக காட்டுவது அவசியமற்றது. | இ.மி.ச ஊழியர் சேமலாப நிதியத்தின் விதிகளை திருத்தியமைத்து நிதிய த்தைப் பேணுவதற்காக இ.மி.ச ஆல் மேற் கொள்ளப்பட்ட செலவினத்தை அறவிடுவதற்கு தேவை யான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசாங்க நிறுவனங்களின் மின் பிறப்பாக்கிகள், மின்தூக்கிகள் மற்றும் வளிப் பதனாக்கிகளின் வழங்கல், | 2013 இற்கு முன்னர் கடன்பட்டோர் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வேலைக்கான உண்மையான செலவு வாடிக்கை | மோசடிகளுக்கான ஆபத்தை குறைப்பதற் காக பதியப்படாத பட்டி யல்களின் பெறுமதிகள் |

| | | |
|---|---|---|
| பராமரிப்பு மற்றும் திருத்தத்திற்காக இ.மி.ச ஆல் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் அவற்றின் விலைச்சிட்டுப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கிரயத்தில் பெறுமதியிடப் பட்டு அதற்கிணங்க அவை கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. இதன்விளைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டியவைகள் மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் என்பன ரூபா 66,987,761 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | யாளரிடமிருந்து பெறத்தக்கவையாகக் காட்டப்பட்டது. 2013 க்கு முந்தைய நிதிக்கூற்றுக்களில் பிரதிபலித்த பெரும்பாலான பெறத்தக்கவைகளை அறவிட முடியாதுள்ளது. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் பெறத்தக்கவைகள், மருத்துவமனைக ளிலிருந்து பெறத்தக்கவை மற்றும் இ.மி.ச. இன் தலைவரிடமிருந்து கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்காக பெறத்தக்கவை போன்றன அவ்வாறு அறவிட முடியாத நிலுவைகளாக உள்ளன.<br><br>மதிப்பிடப்பட்ட பெறுமதியின் அடிப்படை யில் அறவிட முடியாத நிலுவைத் தொகைக்கு விலைப் பட்டியல் செய்வ தும் அதற்கு வற் வரி செலுத்துவதும் இ.மி.ச. இற்கு தேவையற்ற இழப்பை ஏற்படுத்துவதுடன் அது விவேகமான செயற்பாடுமல்ல. எனவே, உண்மை யான கிரயமே அறவிடப்பட வேண்டிய தொகையாகக் காட்டப்படுகிறது.<br><br>இந்த விடயம் பல தடவை கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதே விடயம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. அறவிட முடியாத பெறத்தக்கவைகளு க்கான முழு ஏற்பாட்டையும் இ.மி.ச. செய்துள்ளது. உண்மையான கிரயத் திற்கும் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையிலான தற்போதைய விலகல் (2020 யூன் 30 இல் உள்ளவாறு) 2013 க்கு முன்னர் காணப்பட்ட ரூபா 53,052,302.10 ஆகும்.<br><br>குறிப்பு: - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள தொகையை ரூபா 66,978,761 இற்கு பதிலாக ரூபா 53,052,302.10 என திருத்திக்கொள்ள வேண்டும். | கணக்கீடு செய்யப் படுதல் வேண்டும். |
| (ஊ) 2016 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு தீர்வையாகச் செலுத்திய ரூபா 5 பில்லியனில் ரூபா 500 மில்லியன் மீளாய்ண்டில் முகாமைத்துவக் கட்டணம் செலுத்து தல் என வகைப்படுத்தி வருமானக் கூற்றுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டுச் சீராக்கமாக ரூபா 1 பில்லியன் மேற்கொள்ளப் பட்டிருந்தது. மீதமுள்ள ரூபா 3.5 பில்லியன் தொகையினை உரிமை | 2019.10.16 திகதிய PDE/I/CEB/2/1/(iii) ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்தின் படி, 2019 ஆம் ஆண்டில் திறைசேரிக்குச் செலுத்திய "முகாமைத்துவக் கட்டணம்" என இக்கொடுப்பனவு கருதப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு தொடங்கி 10 ஆண்டுகளிற்கு காலத்தேய்மானம் செய்யப்பட்டுள்ளது. | 2016 இல் பொதுத் திறைசேரியினால் விதி க்கப்பட்ட தீர்வைக்காக செலுத்திய ரூபா 5 பில்லியன் தொகை உரிமை மூலதனக் கூற்றில் காண்பிக்கப்ப டுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மூலதனத்திற்கு மாற்றுவதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களிலுள்ள ஏனைய கடன்பட்டோராகக் காட்டப் பட்டுள்ளது. இருப்பினும், பொதுத் திறைசேரியிடமிருந்து இ.மி.ச ஆல் எந்த முகாமைத்துவச் சேவைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. எனவே இந்த ஆண்டிற்கான நட்டம் ரூபா 500 மில்லியனால் அதிகமாக காட்டப்பட்டிருந்தது. | இ.மி.ச. இன் வழக்கமான செயல்பாட்டிற்கான நிதியினை ஏற்பாடு செய்து கொள்வதற்கு திறைசேரி இ.மி.ச. இற்கு வசதிகளை வழங்குகின்றது. | |
| (எ) துணைநிலைக் கடன் உடன் படிக்கைகளிலுள்ள நிபந்தனைகளின் படி பொது திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,495,574,443 வட்டித் தொகை யினை இ.மி.ச செலுத்தவுமில்லை அல்லது அதற்காக ஏற்பாடு செய்யவுமில்லை. | துணைநிலைக் கடன் உடன் படிக்கைகளில் வட்டிக்கு எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யுமாறு இ.மி.ச. இனை பொது முயற்சிகள் திணைக்களம் அறிவுறுத்தி யிருக்கவோ அல்லது நெறிப்படுத்தியோ இருக்கவில்லை. எனவே இது தொடர்பாக இ.மி.ச. எந்தவொரு ஏற்பாட்டையும் செய்யவில்லை. | துணைநிலைக் கடன் உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் இ.மி.ச பொதுத் திறைசேரிக்கான வட்டி யினை செலுத்துதல் அல்லது ஏற்பாட்டை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஏ) திறைசேரியிடமிருந்தான 10 சதவீத பங்கிலாப வரி என பெயரிடப்பட்ட ரூபா 4,200,000 தொகை தலைமையக புத்தகங்களில் அடையாளம் காணப்படாத பிற கடன்பட்டோரில் உள்ளது. இந்த தொகைக்காக கணக்குகளில் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. | 2005/2006 ஆம் ஆண்டிற்காக ரூபா 42,000,000 மொத்த பங்கிலாபத்தை செலுத்துகையில் லங்கா டிரான்ஸ் போமர் லிமிடட் இனால் கழிக்கப்பட்டிருந்த 10 சதவீத பங்கிலாப வரியினை இது பிரதிநிதித்துவம் செய்கின்றது. இது 2020 இல் திருத்தப்பட்டது. | தேவையான கணக்கீட்டுப் பரிகாரம் பிரயோகிக்கப்படுதல் வேண்டும். |
| (ஐ) இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 31,119,302 தாமத வட்டி கணக்கு புத்தகங்களிலிருந்து தவறவிடப்பட்டுள்ளது. எனவே மீளாய்ண்டிற்கான நட்டம் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | 2020 திசெம்பர் 31 இல் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தாமத வட்டியினை பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கணக்கீட்டுக் காப்பகுதிக்குரிய செலவினம் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஓ) விநியோக பிரிவில் 1 இலுள்ள சொத்துகளுக்கு மாற்றப்படாமல் ரூபா 734,574,801 மதிப்புள்ள பூரணப்ப டுத்திய வேலைகள் நடைபெற்றுவரும் வேலைகள் கணக்கில் வைக்கப்ப ட்டுள்ளன. அந்த சொத்துக்கள் தொடர்பான தேய்மானம் வருமான கூற்றில் சாட்டப்பட்டிருக்கவில்லை. | **மாகாணம்** — **தொகை (ரூபா)**<br>வட மத்திய மாகாணம் — 80,000,759<br>கொழும்பு நகரம் — 441,076,386<br>வடக்கு — 213,497,656<br>**மொத்தம்** — **734,574,801**<br><br>மேலே உள்ள கணக்காய்வு ஐயவினா ரூபா 80 மில்லியன் எனக் காட்டுகின்ற போதிலும் வட மத்திய மாகாண (கிரய நிலையங்களின் கீழ் ரூபா 420.20 மற்றும் 420.30), கணக்குப் புத்தகங்களின் படி, 2019 திசெம்பர் 31 இல் உள்ளவறு, அந்த கிரய | பூரணப்படுத்திய வேலைகள் அவை பூரணப்படுத்தப்பட்டவுடன் சொத்துக் கணக்கிற்கு மாற்றப்படுதல் வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| | நிலையங்களின் மூலதன நடைபெறும் வேலை மீதி ரூபா 794 மில்லியனைக் காட்டுகிறது. அந்த நிலுவைத் தொகையிலிருந்து ரூபா 309 மில்லியன் தொகை கிரய நிலையம் 420.20 மாற்றப்பட்டதுடன் ரூபா 4 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் கிரய நிலையம் 420.30 இன் கீழ் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி, மொத்தம் ரூபா 313 மில்லியன் தொகை 2020 ஆம் ஆண்டில் நடைபெறும் வேலைகளிலிருந்து வட மத்திய மாகாணத்தின் கீழுள்ள சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.<br><br>கொழும்பு நகர மாகாணத்தின் கீழ் மேற்கண்ட மீதியிலிருந்து, மொத்த பெறுமதியான ரூபா 59,668,220.81 தொகை 2020 ஆம் ஆண்டில் சொத்துக்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.<br><br>அத்துடன், டி.ஜி.எம் (வட மாகாணம்) இன் அறிவுறுத்தலின் படி, வட மாகாணத்தின் அந்தந்த அதிகாரிகளும் தங்களின் மாற்றத்தக்க நடைபெறும் வேலை நிலுவைகளை பூரணப்படுத்தல் அறிக்கைகளுக்கு ஏற்ப கணக்கிட்டு வருகின்றார்கள். அதற்கேற்ப அது 2020 ஆம் ஆண்டில் சரிசெய்யப்படும்.<br><br>நடைபெறும்வேலை மீதிகள் தொடர்பில் அனைத்து மாகாணங்களாலும் பொதுவான கால இடைவெளியில் மீளாய்வும் கண்காணிப்பும் மேற்கொள் ளப்படுவதுடன் வேலைகளை பூரணப் படுத்துகையில் அவை மாற்றப்படும். | |
| (ஓ) மொரகஹகந்த மின்வலு நிலையத திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட மின்சாரத்திற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 128,264,040 தொகை மீளாய்வாண்டில் கணக்கு புத்தகங்களிலிருந்து விடுபட்டுள்ளது. எனவே ஆண்டுக்கான நட்டம் ஒத்த தொகையால் குறைத்தக் காட்டப்ப ட்டுள்ளது. | 2020.07.31 இல் முடிவடைந்த காலப் பகுதிக்கான கணக்குப் புத்தகங்களில் மொரகஹகந்த மின்வலு நிலையத்துடன் தொடர்புடைய அனைத்து நிலுவையான பட்டியல்களையும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் பட்டியல்களையும் உரியவாறு பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல் களை பதிவு செய்வத ற்கான வரையறை யினை இனங்காண்ப தற்கு உள்ளகக் கட்டுப் பாடு உருவாக்கப்படு தல் வேண்டும். |
| (ஔ) 2012 இல் நிறைவடைந்த மேல் கொத்மலை நீர் மின்வலு செயற் திட்டம் தொடர்பான ரூபா 944,030,864 முடிவடையாதிருந்த வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப் | இந்த செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2014 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், | பூரணப்படுத்திய திகதியில் நடைபெற்றுவரும் வேலையினை சொத்துக்களிற்கு |

| | | |
|---|---|---|
| பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையே ரூபா 26,972,310 மற்றும் ரூபா 161,833,862 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 2019.12.31 நிலவரப்படி ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 944,030,864 செலவினம் முடிவுறா வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. இந்த தொகை பிரதானமாக பணியாளர்களின் செலவுகள், நடுவருக்கான சட்டத் கட்டணம் மற்றும் நிலம் கையகப்படுத்தும் செலவு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | மாற்றுதல் வேண்டும். |
| (ஃ) 2014 இல் நிறைவடைந்த புத்தளம் நிலக்கரி மின்வலுச் செயற்திட்டம் தொடர்பான ரூபா 603,573,159 நடைபெறும் வேலைகள் நிலையான சொத்துக்களுக்கு மாற்றப் பட்டிருக்கவில்லை. ஆகவே மீளாய்வாண்டுக்கான தேய்மானம் மற்றும் நிறுத்திவைத்த வருவாய் என்பன முறையே ரூபா 20,119,105 மற்றும் ரூபா 100,595,526 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | இந்த செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு ஆரம்ப சொத்துக்களின் பரிமாற்றம் 2015 ஆம் ஆண்டில் அந்தந்த பிரிவுகளுக்கு செயற்படுத்தப்பட்டது. இருப்பினும், 2019.12.31 இல் உள்ளவாறு ஆரம்ப சொத்துப் பரிமாற்றத்திற்குப் பின்னர் ரூபா 603,573,159 செலவினம் நன்றொறும் வேலைக் கணக்கில் திரண்டுள்ளன. நடப்பு ஆண்டிற்குள் மீதமுள்ள செலவை அந்தந்த பிரிவுகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | பூரணப்படுத்திய திகதியில் நடைபெற்றுவரும் வேலையினை சொத்துக்களிற்கு மாற்றுதல் வேண்டும். |
| (க) ரூபா 367,390,040 தொகையான செலவு மீதியொன்று பிரிவுகளிற் கிடையிலான மீதிகளிற்கு எதிரீடு செய்யப்படாது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரிவுகளிற்கு இடையிலான நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | மொத்தத் தொகையில் ரூபா 352 மில்லியன் 2020 ஆம் நிதியாண்டில் திருத்தப்பட்டுள்ளது. | கம்பனிகளுக்கு இடையிலான மீதிகள் எதிரீடு செய்யப்பட்டு காலத்திற்குக் காலம் இணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |
| (கா) மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 999.03 மில்லியன் பதிவு செய்ய ப்பட்டிருக்கவில்லை. ஆகையால், பொறுப்பும் நடைபெறும் வேலைகள் கணக்கும் ஒத்த தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தன. | மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேறுபாடு கள் 3146 மற்றும் 3147 ஆம் இலக்க கடன்களுடன் தொடர்புடையதாகும். கடன் இலக்கம் 3146 ஆனது பசுமை மின்வலு அபிவிருத்தி எரிசக்தி வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் -கூறு 1 இன் பல பகுதிகளால் பயன்படுத்தப்படுகின்றது. மேலேயுள்ள பதிவுசெய்யப்படாத கொடுப்பனவுகளின் பெரும் பகுதி மொரகொல்ல நீர்மின்வலு செயற்திட்டத்துடன் தொடர்புடையதாகும். இ.மி.ச. இன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் இந்தக் கொடுப்பனவுகளுடன் இணைந்ததாக ஈஆர்டி அறிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்காமையால் நிதிக்கூற்றுக்கள் மேற்படி தொகையினை உள்ளடக்கி நாளதுவரையாக்கப்படவில்லை. ஆகையால், இது 2020 இன் பேரேட்டில் நாளதுவரையாக்கப்படுகின்றது. | நடைபெற்றுவரும் உண்மையான வேலையினை அடையாளம் காண்பதற்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அனைத்து கொடுப்பனவுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.5 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மி.ச இன் நிதிக் கூற்றுக்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியதாக காட்டப்பட்ட மீதிக்கும் அத் திகதியிலுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டியதாக காட்டப்பட்ட நேரொத்த மீதிக்கும் இடையில் ரூபா 764,717,080 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.<br>எனினும், இது கணக்காய்வு அறிக்கைகளில் 2013 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் அச்சிக்கல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இதனை கணக்கிணக்கம் செய்வதற்கும் 2020 இன் நிதிக்கூற்றுக்களில் பதியப்படத தாமத வட்டிக் கட்டணத்தை பதிவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்தாலோசித்து சிக்கலைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) விலைப்பட்டியலிடல் முறைமையிலும் அதேபோல் நிதிக் கூற்றுக்களிலும் சில மீதிகள் தவறவிடப்பட்டதன் காரணமாக விநியோகப் பிரிவு 1, 2, 3 மற்றும் 4 இன் விலைப் பட்டியலிடல் முறைமை யில் காட்டப்பட்ட 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளிற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நேரொத்த தொகைக்கும் இடையில் ரூபா 31,813,455 கூட்டு மொத்தமான இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், ரூபா 423,764,624 தொகை 2012 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்படாது வைத்திருக்கப் பட்டுள்ளது. | சபையின் பட்டியலிடல் முறைமையில் பட்டியலிடல் கொடுக்கல் வாங்கலை பதிவுசெய்கின்ற செயன்முறையும் பொதுப் பேரேட்டில் நிதிக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தலும் எந்தவொரு நேரத்திலும் இணங்குவதில்லை. அவ்வாறான வேறுபாடுகளிற்கான காரணத்தை நிச்சயிப்பதற்காக விநியோகப் பிரிவு கணக்கிணக்க மொன்றை மேற்கொள்கின்றது.<br><br>உயர் வழங்கல் கடன்பட்டோர் பேரேட்டு மீதி செயற்பாட்டுக் கடன்பட்டோரையும் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோரையும் உள்ளடக்குகின்றது. இருப்பினும், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை செயற்பாட்டுக் கடன்பட்டோர் மீதியினை மாத்திரம் உள்ளடக்குகின்றது. ஆகையால், ஐரீ கிளையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பட்டியல் அறிக்கை மீதிக்கும் பேரேட்டு மீதிக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு பிரதான காரணம் இறுதியாக்கப்பட்ட கடன்பட்டோர் மீதியாகும். இருப்பினும், கடன்பட்டோர் கணக்கிணக்கக் கூற்று நிதிக்கூற்றில் தரப்பட்டுள்ளது. | பேரேட்டு மீதிகளை முறைமை மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்வதற்காக ஒவ்வொரு மாதமும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறு சேகரிப்பு கட்டுப்பாட்டு பேரேட்டுக் கணக்கிலுள்ள ரூபா 4,073,824,173 மற்றும் ரூபா 129,863,150 வரவு மற்றும் செலவு மீதிகளிற்கான | சாதாரண விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியானது நிதிக் கணக்குகளின் இறுதித் திகதியிலிருந்து வேறுபட்டுள்ளதால் இந்த வேறுபாடுகள் எழுகின்றன. எனவே, சாதாரண | பட்டியலிடல் சுழற்சிக்கும் கணக்கீட்டுக் காலத்திற்கும் ஒத்த திகதியை செயற்படுத் |

| | | |
|---|---|---|
| கணக்கிணக்கம், 2005 யூலை 05 ஆந் திகதிய AFM (DD1) கடிதத்தினால் வழங்கிய அறிவுறு த்தலின் செய்யப்பட்டிராததுடன் அத்தகைய நிலுவைகளுக்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் படவில்லை. எனவே சேகரிப்புக் கட்டுப்பாட்டு கணக்கிலுள்ள மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை. | விநியோக பட்டியலிடல் சுழற்சி இறுதித் திகதியினை நிதி ஆண்டு இறுதித் திகதியை ஒத்ததாக மாற்றுவதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) தொங்கல் மீதியுடன் தொடர்புடைய மொத்தம் ரூபா 79,512,030 பெறுமதியான 66 சதவீதத்திற்கு காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாததுடன் ரூபா 70,306,494 தொகை ஒரு வருடத்திற்கு மேல் தீர்க்கப்படாமல் இருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட அடையாளம் தெரியாத வாடிக்கையாளர் கொடுப்பனவுகளை அந்தந்த நுகர்வோர் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு தொடர்ச்சியான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கும் வரை மேலே தோன்றிய பெரும்பாலான நிலுவைகள் இ.மி.ச. ஆல் அங்கீகரிக்கப்படவில்லை. இந்த மீதியானது கடுமையான கண்காணிப்பு மற்றும் மீளாய்வின் கீழ் உள்ளது. | கணிசமான கால அளவைத் கடந்த சேகரிப்புகளை நிறுவனத்தின் வருமானமாக அங்கீகரித்தல் வேண்டும். |

**1.6 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல் விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வழக்கு இல. CA/WRIT/193/2015 இன் கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைய சட்ட விரோதமான சம்பளக் கொடுப் பனவை 2014 நவம்பர் 27 ஆந் திகதிய 2014/GM/46/Pers ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி சபை தொடர்ந்து மேற்கொண்ட வந்திருந்தது. | நீதிமன்ற தீர்ப்புடன் எவ்வாறு இணங்கியொழுகுதல் வேண்டுமென கௌரவ சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இ.மி.ச. சட்டமா அதிபர் நாயகத்தால் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தை பின்பற்றுகின்றது. | இ.மி.ச நீதிமன்றத் தீர்மானங்களை பின்பற்றுதல் வேண்டும். |
| (ஆ) 2007 நவம்பர் 14 இல் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் 2009 மே 26 இன் 39 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் என்பவற்றிற்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மீது இ.மி.ச இன் பதவியணியினரிற்கு காலத்திற்குக் காலம் பல்வேறு பதவியணியினர் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 1,712 மில்லியன் மற்றும் ரூபா 1,873 மில்லியன் கூட்டு மொத்தமான அத்தகைய படிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வு | நீதிமன்ற தீர்ப்புடன் எவ்வாறு இணங்கியொழுகுதல் வேண்டுமென கௌரவ சட்டமா அதிபர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இ.மி.ச. சட்டமா அதிபர் நாயகத்தால் வழங்கப்பட்ட அபிப்பிராயத்தை பின்பற்றுகின்றது.<br><br>1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல் | பதவியணியினருக்கு படிகளைச் செலுத்துகையில் இ.மி.ச இன் சுற்றறிக்கைத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தெரிவுச் செவ்வைகளின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு<br><br>இதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன வலிமையை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. | |
| (இ) 1998 மார்ச் 08 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் முதல் 14 சதவீதம் வரையான வட்டி வீதத்தில் வாகனக் கடன்களை வழங்குவதற்குப் பதிலாக இ.மி.ச 4.2 சதவீத வட்டி வீதத்தில் அத்தகைய கடன்களை வழங்கியிருந்தது. மேலும், இ.மி.ச பல திரவ பிரச்சனைகளை எதிர்கொள்கின்ற போதிலும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி பதவியணியினர் கடன்கள் செலுத்தப் பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை சட்டத்தின்படி, சபையின் அதிகாரங்கள் 12 ஆம் பிரிவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.<br><br>பிரிவு 12 (எம்): சபையின் விவகாரங்களின் நிர்வாகம் தொடர்பாக விதிகளை உருவாக்குதல்<br><br>பிரிவு 12 (என்): சபையின் கருத்தில் அதன் வியாபாரத்தை முறையாக நடத்துவதற்கு வசதியளிப்பதற்குத் தேவையான ஏனைய எல்லாவற்றையும் செய்வதற்கு<br><br>இதன்படி, குறிப்பிடப்பட்டுள்ள கண்டுபிடிப்புகள் சபையினால் அதன் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பணியாற்றுவதற்கான மன உறுதியை உயர்த்துவதற்காக வழங்கப்படும் நன்மைகளுடன் தொடர்புடையவை. மேலும், சபையின் விவகாரங்களின் நிர்வாகத்தைப் பொறுத்தவரை விதிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்குகிறது. | பதவியணியினருக்கு கடன்களை வழங்கு கையில் இ.மி.ச சுற்றறி க்கைத் தேவைப்பாடு களுடன் இணங்கியொ ழுகுதல் வேண்டும் அல்லது ஏதேனும் விலகல்களிற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |

**1.7 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்** | | |
| (i) விநியோகப் பிரிவுகளிலுள்ள மூலதன வேலைகளினை பூர்த்தி செய்வதிலுள்ள நீண்டகால தாமதம். | பூரணப்படுத்திய தொழில்களை மாற்றும் செயன்முறையானது, அவர்களது நிறைவேற்று அணிக் கூட்டங்களில் குறித்த மாகாணங்களிலுள்ள பிரதிப் பொது முகாமையாளர்கள் மற்றும் பரிவுகளின் உதவிப் பொது முகாமையாளர்ளினால் மேற் கொள்ளப்பட வேண்டிய வழமையான கண்காணித்தல் செயற்பாடாக உள்ளது. | பூரணப்படுத்திய வேலைகளை உடன டியாக மாற்றுவதற்குத் தேவையான நடவடிக் கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ii) நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள இ.மி.ச இன் காணிகளின் விஸ்தீரணம், பெறுமதி மற்றும் பாதுகாப்பை மெய்யாய்வதிலுளள தாமதம். | இ.மி.ச. காணிகளின் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பையும் இ.மி.ச. காணிகளின் நிலங்களின் எல்லைகளையும் பாதுகாக்க அனைத்து கிளைத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. 2020-10-05 இல் உள்ளவாறு இ.மி.ச. காணிகளின் கணக்கெடுப்பு மற்றும் மதிப்பீட்டுச் செயன் முன்னேற்றத்தின்படி, அடையாளம் காணப்பட்ட மொத்த நிலங்களில் 30% இற்குரிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. பிரதேச விவரங்கள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. | இ.மி.ச காணிகளின் நில அளவை மற்றும் பெறுமதியிடுதல் செயன்முறையினை துரிதப்படுத்துதல். |
| **(ஆ) இருப்புக் கட்டுப்பாடு** | | |
| (i) கணக்காய்வின் போது ஒவ்வொரு பிரிவிலும் இருப்பு பேணுதல் தொடர்பான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டமை. | சபை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளை பின்பற்றுகின்றது (ஜீஏஏபி). பிறப்பாக்கம், சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் பரிமாற்றல் பிரிவுகளின் இருப்புக்களை பெறுமதியிடுவதற்காக முதல் வந்தது முதல் செல்லல் முறையினை பயன்படுத்துவதுடன் விநியோகப் பிரிவு நியம விலையிடல் முறையினைப் பின்பற்றுகின்றது. இருப்புக்களினது கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய அனைத்துப் பதிவேடுகளும் “மிட்பின்” முறைமையிலுள்ள இருப்பு முறையின் ஊடாக பேணப்படுகின்றன. | பொருட்களின் பெறுவனவு மற்றும் வழங்கல் முறைப்படி பதிவு செய்யப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) நிலக்கரி இருப்பு தொடர்பில் தொடர்ச்சியாக இருப்பு பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் அவதானிக்கப்பட்டமை. | விடயத்துடன் சம்பந்தப்பட்ட கன்வேயர் “0” இலிலுள்ள மின்னியல் நிறுவைத் தராசு கீழே காட்டப்பட்டவாறு புதுப்பிக்கப்பட்டுள்ளது.<br>1. அனைத்து உடைந்த/ சேதமடைந்த இயந்திரப் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன.<br>2. தேவையான மின்னியல்/I &C பாகங்கள் மாற்றப்பட்டன.<br>3. I & C பிரிவுடன் இணைந்த மாறும் அளவுத்திருத்தம் செயற்பட்டுவருகின்றது.<br>4. கருவிகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு செயற்பாட்டில் உள்ளது. | பெறுவனவின் அடிப்படையில் நிலக்கரி இருப்பு அளவிடப்பட்டு முறைப்படியான முறையொன்றை பிரயோகி த்து ஆண்டின் இறுதி யிலுள்ள உண்மை யான இருப்பின் பெறுமதி அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |

(இ) **செயற்திட்ட முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதில் தாமதம் அவதானிக்கப்பட்டமை. | அனைத்துச் செயற்திட்டச் செயற்பாடுகளும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளும் செயற்திட்டப் பிரிவின் உதவிப் பொது முகாமையாளரால் கண்காணிக்கப்படுகின்றன. | செயற்திட்ட அமுலாக்கல் திட்டமிடப்பட்டவாறு இடம்பெறுதல் வேண்டும். |

**(ஈ) கணக்கீட்டு முறைமை**

| | | |
|---|---|---|
| கணக்கீட்டு முறைமையில் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் காரணமாக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இ.மி.ச இன் நிதிக்கூற்றுக்கள் தொடர்ச்சியாக திருத்தப்படுகின்றமை. | கணக்கீட்டு முறைமையில் காணப்படுகின்ற நலிவு காரணமாக திருத்தியமைத்து வரப்படுவதனைத் தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் திருத்தப்படுவதனை தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(உ) **செயற்பாட்டுக் கையேடு**

| | | |
|---|---|---|
| சபையின் சீரான செயற்பாடுகளிற்கான ஐந்து செயற்பாட்டுக் கையேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்காமை. | இ.மி.ச தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகும். | சபையின் சீரான செயற்பாடுகளிற்காக செயற்பாட்டுக் கையேட்டை நாளதுவரையாக்குதல். |

### 1.8 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.8.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 25,985,253,072 வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் சாதாரண மற்றும் மொத்த வழங்கல்கள் இரண்டுடனும் தொடர்பு டைய ரூபா 4,359,841,435 மீதி ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்ததுடன் அதில் ரூபா | மேலே உள்ள நிலுவைத் தொகையில் ரூபா 2,649,155,825 ஆனது முடிவாக்கப்பட்ட கடன்பட்டோரை பிரதிநிதித்துவம் செய்வதுடன் அவற்றிற்கு சட்டரிதியான அல்லது பதிவழித்தல் நடைமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும். ஆனால், | இறுதியாக்கப்பட்ட வாடிக்கையாளர்களை அறவிடுவதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 2,306,048,005 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாதிருந்தது. | அதற்கு சிறிது காலம் எடுக்கும். மீதமுள்ள நிலுவையில் ரூபா 1,051 மில்லியன் சர்ச்சைக்குரிய விடயங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது தொடர்பில் பரிந்துரைகளைப் பெறுவதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மற்றொரு தொகையான ரூபா. 530 மில்லியனை பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, நிலுவையில் உள்ள கடன்பட்டோர் மீதிகளை கண்காணிக்கவும் அறவிடுவதற்கும் இ.மி.ச. இடம் பொருத்தமான முறைமைகள் காணப்படுகின்றன. | |
| (ஆ) ரூபா 2,635,007,475 கூட்டுத்தொகையான பின்வரும் சில்லறைக் கடன்பட்டோர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. | | கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற நேரத்தில் எந்தவொரு வேலையினதும் செலவினத்தை அறவிடுவதற்கு உள்ள கக் கட்டுப்பாடு பலப்படுத்தப்படுதல் வேண்டும். |

| கடன்பட்டோர் பெயர் | தொகை ரூபா | விபரம் | |
|---|---|---|---|
| பொதுத் திறைசேரி | 225,000,000 | வீதி வெளிச்சமிடல் மற்றும் பராமரிப்புக் கிரய த்தை அறவீடு செய்தல். | இத்தொகை திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய துணைநிலைக் கடன்களின் மீள்கொடுப்பனவிற்கு எதிராக எதிரீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதனால், நிதி அமைச்சின் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பணிப்புரைக்கு அமைய 2015 முதல் இ.மி.ச. இன் புத்தகங்களிலிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 225 மில்லியன் தொகையினை அகற்றுவதற்கு முடியாதுள்ளது. |
| அரசாங்க நிறுவனங்கள் | 120,653,322 | பாரந்தூக்கி, காற் றுச் சீராக்கிகள் மற்றும் மின்வலு பிறப்பாக்கிகள் | மின் பிறப்பாக்கிகளை வழங்கியமைக்காக சனாதிபதி மாளிகையில் இருந்து பெறப்பட வேண்டிய வருவாயின் பெறுமதி இதுவாகும். திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் (TOD) மீளளிக்கப்பட வேண்டிய திறைசேரிக் கடன்களிற்கு எதிராக இத்தொகையினை சாட்டுதல் செய்யுமாறு TOD இ.மி.ச. இனை கோரியுள்ளது. அதற்கமைய, இதனை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| மூலதனமாக்கப்படாத முடிவுறா வேலைகள் | 8,601,341 | | அரசாங்க பொருத்துதல் வேலைகளிற்காக பெறவேண்டிய தொகையினை இது பிரதிநிதித்துவம் செய்வதுடன் இந்த நீண்டகால நிலுவையினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| வூட் குறூப் காஸ் ரேபைன் லிமிடட் | 8,264,352 | மேற்குக் கரையோர மின்வலு ஆலைக்கு உள்ளக வீதியொன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். | பெறப்பட வேண்டியதாக உள்ளது. |
| மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 6,142,277 | கெரவலப்பிட்டிய இணைந்த மின்வலுப் பொறியின் திறப்பு விழாவிற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள். | பெறப்பட வேண்டியதாக உள்ளது. |
| இலங்கை நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபை | 897,025,999 | சிற்றளவு நீர் மின்சார அபிவிருத்தியாளர்களிற்கு இ.மி.ச. இனால் செலுத்தப்பட்ட கட்டணச் சீராக்கல். | நிலைபெறுதகு எரிசக்தி அதிகாரசபையிடமிருந்து பெறத்தக்க ரூபா 897,025,999 தொகையை பதிவழிப்பதற்கு ஏஎப்எம் (பரிமாற்றல்) ஒரு சபை விஞ்ஞாபனத்தை உருவாக்கியுள்ளார். மேலும், இந்த பிரச்சினைக்காக ஒரு விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. |
| ஏஈஎஸ் கெலனிதிஸ்ஸ (பிறைவேட்) லிமிட்டட் | 1,368,961,445 | விலை வேறுபாடுகளின் கொடுப்பனவு மீது அறவிடப்பட வேண்டிய தொகை. | பெறப்பட வேண்டியதாக உள்ளது. |
| நொதர்ன் பவர் (பிரைவட்) லிமிடட் | 358,739 | 2011 ஆம் ஆண்டில் இ.மி.ச. ஆல் பூரணப்படுத்திய விரிவாக்கல் வேலைக்காக பெறப்பட வேண்டிய மீதியாகும். | |
| மொத்தம் | 2,635,007,475 | | |

| | | |
|---|---|---|
| (இ) நிலக்கரி பற்றாக்குறை தொடர்பில் ஐந்து வருடங்களுக்கு மேலாக லங்கா கோல் கம்பனியிடமிருந்து அறவிடப்படாதுள்ள ரூபா 714,965,435 நீண்டகால நிலுவை மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதியானது தௌரியன் அயன் அன்ட் ஸ்ரீல் கம்பனியின் ரூபா 478,179,795.00 மற்றும் லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் இன் ரூபா 236,785,639.43 தொகைகளை உள்ளடக்குகின்றது. தௌரியன் அயன் அன்ட ஸ்ரீல் கம்பனியின் நிலுவை தொடர்பில் ஒரு அமைச்சரவைக் குழு நியமிக்கப்பட்டு இறுதி அறிக்கை துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>லிபர்டி கொமோடிரீஸ் லிமிடட் விடயத்தில் லங்கா கோல் கம்பனி ஒரு நடுவர்தீர்ப்பு செயல்முறையைத் தொடங்கியுள்ளது. லங்கா கோல் கம்பனியினால் லிபர்டி | கிரயத்தை அறவிடுவதற்கும் சந்தர்ப்பக் கிரயத்தை தவிர்ப்பதற்கும் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| | கொமோடிரீஸ் லிமிடட் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இந்த மீதி நீக்கப்படும். | |
| (ஈ) சொத்து முகாமைத்துவப் பிரிவின் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 151,421,219 தொகை ஐந்து ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 142,477,285 தொகை அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமென்பதுடன் ஆரம்பத்திலிருந்தே இத்தொகைகளை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வேலைகள் அனைத்தும் சூழ்நிலைகளின் ஈர்ப்பைப் பொறுத்து அமைச்சு அல்லது இ.மி.ச. இன் உயர் அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல் களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. நிலுவைத் தொகையை கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்கனவே நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்தந்த பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் கணக்காளர் (டபிள்யூ அண்ட் ஏஎஸ்) நிலுவைத் தொகைகளை அறிவிடுவ தற்கு பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். மீதமுள்ளவை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு மற்றும் அரச மருத்துவமனை களிலிருந்து பெற வேண்டியவையாகும்.<br><br>தற்போது, வேலைகளை மேற்கொள்வ தற்கு முன்னர் மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்து வம்) வழங்கிய வழிகாட்டுதலின் படி இ.மி.ச. ஒரு கட்டுப்படுத்தப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுவதுடன் நிலுவையில் உள்ள கொடுப்பனவுகள் வழக்கமான அடிப்படையில் கண்காணி க்கப்படுகின்றது. | கொடுக்கல் வாங்கல் இடம்பெறுகையில் பெற வேண்டியவற்றை அறவிடுவதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

### 1.8.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பின்வரும் ரூபா 4,947,283,160 கூட்டுத் தொகையான கடன்கொடுநர் மீதிகள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்தன.<br><br>**கடன்கொடுத்தோர் பெயர்** — **தொகை ரூபா**<br>சுங்கம் — 1,065,828 | ரூபா 4,947,283,160 தொகையிலுள்ள ரூபா 1,065,828 ஆனது 2017/2018 நிலக்கரி பருவ காலத்திற்காக வரையறுத்த லங்கா கோல் கம்பனிக்கு செலுத்த வேண்டிய நட்டஈடாவதுடன் 2020 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையை தீர்ப்பதற்கு லக்விஜய மின்வலு ஆலையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | சேவை வழங்குனர்களுடன் பிணக்குகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சீன இயந்திர பொறியியல் கூட்டுத்தாபனம் | 3,596,324,467 | சீனா மெஷினரி இன்ஜினியரிங் கார்ப்பரேஷனுக்கு (CMEC) செலுத்த வேண்டிய ரூபா 3,596,324,467 மேற்குறித்த நிலுவையில் உள்ளடங் கியுள்ளது. CMEC இற்கான 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை தீர்க்கப்பட்டது. 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான கொடுப்பனவுகள் நிலுவையில் உள்ளன. தற்போதைய மோசமான நிதி நிலைமை காரணமாக இ.மி.ச. மாதத்திற்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை மட்டுமே விடுவிக்கின்றது. |
| செலுத்தவேண்டிய பிடித்துவைத்த பங்கிலாப வரி | 1,270,766,413 | 2013/2014 க்கான ‘‘கணக்கீட்டு இலாபம்” இன் அடிப்படையில் பொறுப்பு நிச்சயிக்கப்பட்டிருந்தமை யால் இ.மி.ச. இனால் ஏய்ப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 1,270,766,413 பிடித்துவைக்கப்பட்ட செலுத்த வேண்டிய பங்கிலாப வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள த்துடன் கலந்துரையாடப்பட்டது. இந்த விவகாரம் இன்னும் தீர்க்கப்படாததால், இ.மி.ச. தலைவரின் FM (AFM (HQ) / DFM (tup) / பிடித்துவைத்த பங்கிலாப வரி ஆம் இலக்க 2020.07.08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இந்த சிக்கலைத் தீர்ப்பதற்கு பொதுத் திறைசேரியின் செயலாளரின் தலையீடு கோரப்பட்டுள்ளது. |
| மூலதனச் செலவினம் | 10,928,756 | ரூபா 10,928,756 என்பது வட மாகாணத்தின் டிஜீஎம் அலுவலக வளாகத்திற்கு செலுத்த வேண்டிய இறுதிக் கட்டணமாகும். அமைச்சரவை வீதக் குழுவின் ஒப்புதல் கிடைக்காததால் இந்த கொடுப்பனவு நிலுவையில் உள்ளது. |
| புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்தின் அட்டுறு செலவினம் உள்ளிட்ட சில்லறைக் கடன்கொடுநர். | 68,197,696 | ரூபா 4,947,283,160 மீதியில் ரூபா 68,197,696 புத்தளம் நிலக்கரி மின்வலு செயற்திட்டத்தின் அட்டுறு செலவாகும். நடப்பு ஆண்டில் கணக்கு புத்தகங்களில் இந்த தொகையை சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| மொத்தம் | 4,947,283,160 | |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) பரிமாற்றல் பிரிவிலுள்ள வியாபாரக் கடன்கொடுத்தோராகக் காட்டப்பட்டுள்ள ரூபா 3,371,599,434 தொகை ஒரு ஆண்டுக்கும் மேலாக தீர்க்கப்படாமலுள்ளது. | அந்த நிலுவையிலுள்ள மீதிகளின் தீர்ப்பனவுச் சாத்தியத்தினை உறுதிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பதிவேடுகளின் படி ரூபா 3.3 பில்லியன் தொகையில் ரூபா 3.1 பில்லியன் சுயாதீன மின் கொள்வனவு தொடர்பான சர்ச்சைக்குரிய விலைப்பட்டியல் தொகைகளை குறிக்கின்றது. பொருத்தமான கணக்கீட்டுப் பரிகாரத்தை மதிப்பீடு செய்வதற்கும் கண்டுபிடிப்பதற்கும் இந்த விலைப்பட்டியல் ஆய்வு செய்யப்படுகின்றது. | வழங்குனர்களுடன் பிணக்குகள் ஏற்படுவதனைத் தவிர்ப்பதற்காக பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவு | இ.மி.ச ஆனது அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டவாறு நுகர்வோர் வைப்பபுக்க ளிற்கான வட்டியை செலுத் தியிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டிற்காக இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவினால் அறிக்கையிடப்பட்ட விலை வீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அவற்றின் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூபா 1,592 மில்லியனாக இருந்ததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்படாத திரண்ட வட்டி ரூபா 5,118 மில்லியனாக இருந்தது. | 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 3(ஈ) மற்றும் 30 ஆம் பிரிவின் பிரகாரம், மின்சார தீர்வைகள் பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவினால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், தற்போதைய மின்சாரத் கட்டணங்களானது, இ.மி.ச. இன் வணிகத்தை மேற்கொள்வதற்காக போதியளவு காசினை உருவாக்குவதில்லை.<br>சட்டத்திலுள்ள தொடர்புடைய விதிகள் வருமாறு;<br><br>3(1) இலங்கையிலுள்ள மின்சாரத் தொழிலிற்கான சிக்கன, தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு பிரமாணங்கள் என்ற வகையில் செயற்படுதல் ஆணைக்குவின் தொழிற்பாடாகுமென்பதுடன்,<br><br>(ஈ) - பாவனையாளர்களிற்கு சாத்தியமான உச்ச சிக்கன மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக, அனுமதிப் பத்திரதாரர்கள் மற்றும் ஏனைய மின்சார பொறுப்பாளர்களால் | சட்டத்திலுள்ள தேவைப்பாடுகளுடன் சபை இணங்கியொழுகுதல் வேண்டும். |

விதிக்கப்படுகின்ற தீர்வைகள் மற்றும் ஏனைய கட்டணங்களை ஒழுங்கமைத்தல்.

30(1) இப்பிரிவினை பின்வருவன வற்றிற்கு பிரயோகித்தல் வேண்டும்.

-மின்சார பரிமாற்றம் மற்றும் மொத்த விற்பனை க்காக பரிமாற்றல் அனுமதிப் பத்திரதாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “பரிமாற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகள் என அழைக்கப்படும்); மற்றும்

-மின்சார விநியோகம் மற்றும் வழங்களிற்காக விநியோக அனுமதிப்பத்திரதாரர்களால் விதிக்கப்பட்ட தீர்வைகள் அல்லது கட்டணங்கள் (இதனகத்துப் பின்னர் “விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகள்” என அழைக்கப் படும்); மற்றும்

(2)சூழ்நிலைக்கேற்ப பரிமா ற்றல் மற்றும் மொத்த விற்பனைத் தீர்வைகளும் விநியோக மற்றும் வழங்கல் தீர்வைகளும் தொடர்புடைய அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

-அது ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட கிரயத்தை வெளிக்காட்டும் முறைக்கு அமைவாக குறித்த அனுமதிப்பத்திரதாரர்களால் ஏற்படுத்தப்பட்டதாக:

-வினைத்திறனான அடிப்படை யொன்றின் மீது அதற்குரிய அனுமதிப்பத்திரத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட செயற் பாடுகளை மேற் கொள்கையில் உறப்பட்ட

நியாயமான அனை த்துக் கிரயங்களையும் அறவிடு வதற்கு தொடர்புடைய அனுமதி ப்பத்திரதாரரை அனுமதிப்பதாக:

-பிரிவு 5 இன் கீழ் அமைச்சரவையால் அங்கீகரி க்கப்பட்ட கொள்கை வழிகாட்டலிற்கு அமைவாக ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாக காணப்படுகின்ற: மற்றும்

- பொதுமக்களை அறிவுறு த்துவதற்காக ஆணைக்குழு வினால் தேவைப்படுத்தப்ப ட்டவாறு உரிய முறையில் வெளியிடப்பட்டும், இருத்தல் வேண்டும்.

2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு விநியோக அனுமதிப்பத்திர தாரரும் (DL) அவற்றினது பாவனையாளர்களின் பாதுகாப்பு வைப்புக்களிற்காக வட்டியினை செலுத்துதல் வேண்டும். அதிகாரச்சட்டத்தில் இக்கூற்று பின்வருமாறு காணப்படுகின் றது.

பிரிவு 28(3)– "இந்தப் பிரிவிற்கு அமைவாக பிணைப் பணம் என்ற வகையில் விநியோக அனுமதிப்பத்திரதாரருக்கு வழங்கப்பட்டு அனுமதிப் பத்திரதாரரின் கைவசம் வைத்திருக்கப்படும் எந்தவொரு பணத் தொகையுமாகும். ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அனுமதிப் பத்திரதாரரால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்ற அவ்வாறான வீதமொன்றில் அந்த பிணைப் பணம் மீது அனுமதிப்பத்திரதாரரின் கைவசம் வைத்திருக்கப்படுகின்ற அவ்வாறான காலப்பகுதிக்கு வட்டியினை செலுத்துதல் வேண்டும்".

தற்போது இ.மி.ச. அதனது வணிகத்தை நடாத்திச் செல்வதற்கு போதியளவு பணத்தை சேகரிக்காமையின் விளைவாக அதனது பாவனையாளர்களின் பிணை வைப்புக்களை தொழிற்படு மூலதனத் தேவையின் ஒரு பகுதியாக பயன்படுத்துவதுடன எஞ்சிய தொழிற்படு மூலதனத் தேவையினை மேலதிகப் பற்றுக்கள், குறுங்காலக் கடன்கள் என்ற வகையில் வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்கின்றது.

இ.மி.ச. இனால் அதனது தொழிற்படு மூலதனத்தின் ஒரு பகுதியாக அதனது பாவனையாளர்களின் பிணை வைப்புக்களை பயன்படுத்துவதன் மூலம், வங்கி மேலதிகப் பற்றுக்குச் செலுத்த வேண்டிய வட்டியினைச் சேமித்து அதனது பாவனையாளர்களிற்குப் பகிரப்படுகின்றமையால் கட்டணத்தை குறைக்கக்கூடியதாக உள்ளது. அதாவது, 2018 ஆம் ஆண்டில் இ.மி.ச அதனது அனைத்து பாவனையாளர்கள் மத்தியிலும் ரூபா 1,562 மில்லியன் தொகையினை பகிர்ந்திருந்தது. இந்த பிணை வைப்பினை வங்கியொன்றில் வைப்புச் செய்திருப்பின் வட்டியினை உழைத்திருக்க முடியும் என்பதாக வரைபு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பெறுமதியே இதுவாகும்.

இந்த பிரிவின் பிரகாரம் பிணை வைப்புக்கள் மீது DL வட்டியினை செலுத்தியிருப்பின் அது DL இற்கான நிதிச் சுமையாக சேர்ந்து தொழிலிற்கு மேலதிகக் கிரயத்தை தோற்றுவித்திருக்கும்.

ஆகையால், 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டத்தின் 28(3) ஆம் பிரிவை முழுமையாக நீக்குவதற்கு நாம் அமைச்சிற்கு பரிந்துரைத்துள்ளதுடன் இது தொடர்பில்

மேலதிக நடவடிக்கையினை எடுக்குமாறு அமைச்சினை கோரியுள்ளோம்.

(ஆ) 2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆம் பிரிவின் 4 இ (ii)

சட்டத்திலுள்ள தேவைப்படுகளின் படி, கேள்வி கோரல் நடைமுறையினைப் பிரயோகிக்காது 2016 ஏப்ரல் முதல் 2019 திசெம்பர் வரையான காலப்பகுதியில் இ.மி.ச. (ரூபா 59.4 பில்லியன் பெறுமதியான 2,165.51 GWh) அவசர மின்வலுக் கொள்வனவினை செய்திருந்தது. மேலும் அந்த மின்வலு ஆலைகள் ஒழுங்கமைப்பாளரிடமிருந்து பிறப்பாக்க அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாது செயற்பட்டிருந்தன.

2013 இன் 31 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் 43 ஆம் பிரிவின் 4 இ (ii) இன் பிரகாரம் இ.மி.ச. 2016 ஏப்ரல் முதல் 2019 தசம்பர் வரையிலான காலகட்டத்தில் அனல் மின் உற்பத்தி பொறிகளை பின்வரும் இரண்டு வகைகளின் கீழ் சேர்த்துக் கொண்டது.

1. சர்வதேச போட்டி கேள்வி மனு (ஐசிபி) செயல் முறையை பின்பற்றி குறுகிய கால அடிப்படையில் குறைநிரப்பு மின்வலுவை கொள்வனவு செய்தல்.

2. தற்போதைய ஐபிபி அனல் மின் ஆலைகளின் மின் கொள்வனவு உடன் படிக்கைகளின் (பிபிஏ) காலத்தை நீடித்தல்.

மேற்குறிப்பிட்ட காலகட்டத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மொத்த அலகுகள் வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 442.26 | 11.93 |
| 2017 | 859.43 | 23.57 |
| 2018 | 474.79 | 13.85 |
| 2019 | 734.99 | 22.20 |
| **மொத்தம்** | **2,511.47** | **71.56** |

1. குறுகிய கால அடிப்படையில் குறைநிரப்பு மின்வலுக் கொள்வனவு.

இந்த வகையின் கீழ், பின்வரும் சர்வதேச போட்டி கேள்வி மனு (ஐசிபி) நடைமுறைகளைப் பின்பற்றி கேள்வி கோரல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மின்வலுவைக் கொள்வனவு செய்கையில் சட்டத்திலுள்ள தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

i. கேள்வி கோரல் இல. (EPT)/EmPwr/2016/02 (குறுகிய கால அடிப்படையில் 60 மெகாவாட் மின்சாரம் வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 60 மெகாவாட்

ii. கேள்விகோரல் இல. DGM(EPT)/EmPwr/2017/01 (குறுகிய கால அடிப்படையில் இ.மி.ச. இற்கு குறைநிரப்பு மின்சக்தி வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 56 மெகாவாட்

iii. கேள்வி கோரல் இல. DGM(EPT)/EmPwrb/2019/01 (குறுகிய கால அடிப்படையில் மொத்தமாக 100 மெகாவாட் குறைநிரப்பு மின் மின்சாரம் வழங்கல்) சேர்க்கப்பட்ட இயலளவு - ஆறு மாதங்களுக்கு 100 மெகாவாட்

இந்த சகல கொள்வனவுகளும் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சார (திருத்திய) சட்டத்தின் பிரிவு 43 இற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளாய்வுக்குரிய காலகட்டத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | - | - |
| 2017 | 167.03 | 5.39 |
| 2018 | 36.80 | 1.96 |
| 2019 | 142.13 | 5.06 |
| **மொத்தம்** | **345.96** | **12.41** |

2. காலாவதியான ஐபிபி அனல் மின் நிலையங்களின் மின் கொள்வனவு ஒப்பந்தங்களின் (பிபிஏ) காலநீடிப்பு.

இந்த வகையின் கீழ், காலாவதியான ஐபிபி அனல் மின் நிலையங்களின் மின் கொள்வனவு ஒப்பந்தங்கள் (பிபிஏ) பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

முன்னைய காலாவதியான மின் கொள்வனவு ஒப்பந்தங்களின் நீடிப்புக்காக 2009 இன் 09 ஆம் இலக்க இலங்கை மின்சாரம் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 43 இலிருந்து எந்தவொரு சட்ட ரீதியான தடையையும் நாங்கள் அடையாளம் காணவில்லை.

i. வரையறுத்த ஏஸ் பவர் எம்பிலிபிட்டி (தனியார்) நிறுவனத்தின் 100 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.

அ. 2016-04-06 முதல் ஒரு வருடம்

ஆ. 2017-04-06 முதல் ஒரு வருடம்

இ. 2018-04-06 முதல் மூன்று ஆண்டுகள்

ii. வரையறுத்த ஏஸ் மின் உற்பத்தி மாத்தறை (தனியார்) நிறுவனத்தின் 20 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.

அ. 2017-03-25 முதல் ஒரு வருடம்

ஆ. 2019-04-08 முதல் இரண்டு ஆண்டுகள்

iii. ஆசியா பவர் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் 50 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம்.

அ. 2019-04-12 முதல் இரண்டு ஆண்டுகள்

ஏஸ் பவர் எம்பிலிபிட்டியா மின் பொறி தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் வாங்கிய மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 358.74 | 8.48 |
| 2017 | 513.34 | 11.84 |
| 2018 | 362.84 | 9.16 |
| 2019 | 460.92 | 12.70 |
| **மொத்தம்** | **1,695.85** | **42.18** |

ஏஸ் பவர் மின் உற்பத்தி மாத்தறை மின்பொறி தொடர்பாக மதிப்பாய்வு செய்யப்பட்ட கால கட்டத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | - | - |
| 2017 | 62.29 | 1.64 |
| 2018 | 19.55 | 0.51 |
| 2019 | 53.20 | 1.74 |
| **மொத்தம்** | **135.05** | **3.89** |

ஆசிய மின் உற்பத்தி பொறி தொடர்பாக மதிப்பாய்வுக் காலத்தில் கொள்வனவு செய்த மொத்த அலகுகள் மற்றும் கிரயங்கள் பின்வருமாறு.

| ஆண்டு | கொள்வனவு செய்த அலகுகள் (GWh) | மொத்த கிரயம் (ரூபா பில்.) |
|---|---|---|
| 2016 | 83.52 | 3.45 |
| 2017 | 116.76 | 4.69 |
| 2018 | 55.59 | 2.22 |
| 2019 | 78.73 | 2.70 |
| **மொத்தம்** | **334.61** | **13.07** |

(இ) 1969 இன் 17 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை அதிகாரச்சட்டம் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 46 ஆம் பிரிவு மற்றும் 11(அ) மற்றும் (ஆ) பிரிவுகள்

1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் உள்ளவாறான மொத்தம் நிலையான சொத்துக்களின் மொத்தப் பெறுமதியில் 0.1 சதவீதப் பங்களிப்பு காப்புறுதி பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதி லும் அந் நிதியத்தில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,996

இ.மி.ச. பல ஆண்டுகளாக மோசமான திரவத்தன்மை சூழ்நிலையை சந்தித்துள்ள மையால் காப்பீட்டு முதலீட்டு எஸ்க்ரோ கணக்கில் முதலீடு செய்யாததால் இந்த வேறுபாடு முக்கியமாக எழுந்துள்ளது. இருப்பினும், இ.மி.ச. இன் நிதி நிலைமை மற்றும் திரவ நிலைமை மேம்படுத்தப்பட்ட வுடன் காப்பீட்டு நிதிய முதலீட்டு கணக்கில் மொத்த

சொத்து அடிப்படையை கருத்திற்கொண்டு, சொத்துக்களிற்கான ஏதேனும் இழப்பினை அறவிடவதற்காக ஒதுக்கம் பேணப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் தொகையை மாத்திரம் இ.மி.ச முதலீடு செய்திருந்தது. | நிலையான சொத்துகளில் 1% க்கு சமமான முதலீட்டை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவு | PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 9.4 ஆம் பிரிவுக்கு முரணாக, 2008 முதல் அவ்வப்போது வரிசை அமைச்சுக்கு விடுவிக்கப்பட் டிருந்த 26 ஊழியர்களிற்காக ரூபா 49,138,383 தொகை யினை ஆண்டிற்கான சம்பளமாகவும் ஏனைய கொடுப்பனவுகளாகவும் சபை செலுத்தியிருந்தது. | ஊழியர்களை விடுவிக்குமாறு வரிசை அமைச்சினால் மேற் கொள்ளப்பட்ட கோரிக்கை களை இ.மி.ச. இற்கு நிராகரிக்க முடியாதுள்ளமை யால், ஏற்பட்டுள்ள செலவின த்தை இ.மி.ச. இனால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 1.10 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உழைக்கும் போதே செலுத்தும் (பிஏவைஈ) வரிப்பொறுப்பை ஊழியர்களுக்கு மாற்றுவதற்காக 2015 மே 20 இல் கூட்டு உடன்படிக்கையை கருத்தில் கொள்ளும் போதும் 2007 திசெம்பர் 13 இல் சம்பள மீளாய்வின் போதும் அமைச்சரவை தீர்மானங்களை எடுத்திருந்தது. எனினும் அமைச்சரவையால் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானங்களுக்கு முரணாக 2010 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து ரூபா 4,919,156,644 உழைக்கும் போதே செலுத்தும் வரியை கழிக்காமல் இ.மி.ச அதன் சொந்த நிதியிலிருந்து அத்தொகையை செலுத்தியிருந்தது. மீளாய்வாண்டின் போது அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை ரூபா 709,110,273 ஆக இருந்தது. | இ.மி.சபையின் ஊழியர்கள் உழைக்கும் போதே செலுத்தும் வரி பொறுப்புக்கு உட்படுகின்றமையால் அவர்களது உழைக் கும் போதே செலுத்தும் வரிப் பொறுப்பை இ.மி.சபை பொறுப்பேற்றிருந்தது. இது தொடர்பில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவிற்கும் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதுடன் தொழிற்சங்கங்களுடன் சில சுற்று பேச்சுவார் த்தைகள் இடம்பெற்றன. இருப்பினும், இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கவில்லை. 2018.01.04 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை 2018.04.23 ஆந் திகதிய 2068/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. ஆகையால், இணங்கப்பட்ட சம்பளத்தினை மாற்றுதல் கூட்ட உடன்படிக்கையினை மீறுவதாக உள்ளதுடன் சட்டரீதியான சிக்கல்களையும் அது தோற்றுவிக்கும். | உழைக்கும் போதே செலுத்தும் வரியை ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2001 மே 20 ஆம் திகதிய 1706/18 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் குறித்துரைக்கப்பட்ட காசற்ற நலன் களின் பெறுமதி ஒவ்வொரு ஊழியரினதும் உழைக்கும் போதே செலுத்தும் வரிக் கணிப்பீட்டின் போது | உழைக்கும் போதே செலுத்தும் வரி கணக்கீட்டிற்காக (PAYE) குடியிருப்புக்கள் மற்றும் தனியார் பயன்பாட்டிற்கான மோட்டார் வாகனம் போன்ற பணமற்ற சலுகைகளை கருத்திலெடுப்பதற்காக 2018/GM/39/FM ஆம் இலக்க 526 ஆவது கணக்கு சுற்றறிக்கையின் மூலம் | உழைக்கும் போதே செலுத்தும் வரியை கணிப்பிடுகையில் அனைத்து காசற்ற நலன்களையும் கருத்திற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். எனினும் இ.மி.ச ஆனது தனிப் பாவனைக்கான விடுதிகள், குடியிருப்புக்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற ஏற்பாடு களிற்கான காசற்ற நலன்களை இந் நோக்கத்திற்காக கணக்கிற்கு எடுத்திருக்கவில்லை.

அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் புதிய உள்நாட்டு வருவாய் சட்டத்தை அமுல்ப்படுத்துவதன் மூலம அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதால் இ.மி.ச. இன் அனைத்து பிரிவுகளும் இதற்கு இணங்கி ஒழுகுவதற்கு நியாயமான காலம் எடுக்கும்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான இ.மி.ச ஆனது தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 22,395 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 73,367 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய நட்டத்தை விளைவித்திருந்ததனால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 50,972 மில்லியன் பின்னடைவு அவதானிக்கப்பட்டது. நீர் மின்சார உற்பத்தி 25 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமையால், எரிபொருள் கிரயம், நிலக்கரி மற்றும் மின்வலுக் கொள்வனவு என்பன முறையே 28 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 40 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் மின்வலு பிறப்பாக்கல் பிரிவின் செயற்பாட்டு மற்றும் பேணுகைச் செலவினம் 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை போன்றன இந்த பின்னடைவிற்கான பிரதான காரணங்களாகும். அத்துடன், நிதிக் கிரயமானது ரூபா 9,489 மில்லியன் அல்லது 73 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை இந்த பின்னடைவுக்கான ஏனைய காரணமாகும்.

எனினும் ரூபா 100,214 மில்லியன் கூட்டுத்தொகையான ஆளணி வேதனங்கள், வரிச் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வை கணக்கிற்கு எடுத்ததன் பின்னர் மீளாய்வாண்டிற்கான இ.மி.ச இன் பெறுமதிச் சேர்க்கை ரூபா 37,406 மில்லியனாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 39,285 மில்லியனால் அல்லது 51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

#### 2.2.1 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இ.மி.ச இன் தொழிற்படு மூலதன நிலைமை ரூபா 90,673 மில்லியன் எதிர்மறைப் பெறுமதியாக இருந்த அதேநேரம் முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறு இது ரூபா 28,924 மில்லியன் நேர்மறைப் பெறுமதியாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் தொழிற்படு மூலதனம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 213 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

#### 2.2.2 உரிமை மூலதனத்திற்கான கடன்

2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சீஈபீ இன் உரிமை மூலதன மீதியானது சீஈபீ இன் தொடர்ச்சியான தேறிய நட்டம் காரணமாக நேரொத்த 8 சதவீத வீழச்சியுடன் ஒப்பிடும் போது 19 சதவீதத்தால் அல்லது ரூபா 63,846 மில்லியனால் வீழச்சியடைந்திருந்தது. மேலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இ.மி.ச இல் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்தில் 37 சதவீதம் அல்லது ரூபா 334,671 மில்லியன் கடன்களினூடாக நிதியிடப்பட்டிருந்தது. அத்துடன், சீஈபீ இன் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் முன்னைய ஆண்டில் 88 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 123 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 இலாபத்தன்மை

2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 19.12 ஆன அலகு ஒன்றிற்கான சராசரிக் கிரயத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 23.29 ஆக இருந்ததுடன் அலகொன்று ரூபா 16.63 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டது. (முன்னைய ஆண்டுச் சராசரி விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 16.29 ஆக இருந்தது). அதற்கிணங்க, மீளாய்வாண்டின் அலகொன்றுக்கான மொத்த நட்டம் ரூபா 6.63 ஆக இருந்ததுடன் அலகொன்றுக்கான ரூபா 2.83 ஆன முன்னைய ஆண்டுச் சராசரி மொத்த நட்டத்துடன் ஒப்பிடும் போது இது 134.27 சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது. பின்வரும் அட்டவணையானது கட்டண வகைப்படுத்தலையும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் விநியோகிக்கப்பட்ட மின்சாரத்தின் அலகொன்றிற்கான (கேடபிள்யூஎச்) பங்களிப்பையும் காட்டுகின்றது.

| **வகை** | **அலகொன்றிற்கான பங்களிப்பு (kWh)** | |
|---|---|---|
| | **2019** | **2018** |
| | **ரூபா** | **ரூபா** |
| உள்நாடு | (9.16) | (5.52) |
| மதத்தலங்கள் | (15.98) | (11.84) |
| பொது நோக்கம் | 0.65 | 4.66 |
| ஹோட்டல் | (5.58) | (1.50) |
| கைத்தொழில் | (8.57) | (4.40) |
| அரசாங்கம் | (5.11) | (0.89) |
| எல்ஈசீஓ இற்கான மொத்த வழங்கல்கள் | (10.67) | (3.59) |
| வீதி விளக்குகள் | (23.28) | (19.12) |
| பங்களிப்பு | (6.66) | (2.83) |

இதற்கமைய, பொது நோக்கத்தின் கட்டண வகைப்படுத்தல் மாத்திரமே மீளாய்வாண்டின் மொத்தப் பங்களிப்பிற்கு நேர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் இதுவும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 86 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. கைத்தொழில் மற்றும் உள்நாட்டு வகைப்படுத்தல் மீதான கட்டணம் மீளாய்வாண்டிற்கான மொத்தப் பங்களிப்பிற்கு ஆகக்கூடிய எதிர்க்கணியப் பங்களிப்பாளராக இருந்ததுடன் மதத்தலங்கள், ஹொட்டேல், அரசாங்கம், எல்ஈசீஓ இற்கான விற்பனைகள் மற்றும் வீதி விளக்குகள் மீதான கட்டணமும் அதற்குரிய சாதகமற்ற பங்களிப்புக்களை காட்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### (i) மின்வலு உற்பத்தி மற்றும் நேர்க் கிரயம் (வழங்கல் மற்றும் பரிமாற்றல் கிரயம் தவிர)

நாட்டிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது இ.மி.ச. இன் பிரதான நோக்கமாக உள்ள போதிலும் மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள சாதகமற்ற நிபந்தனைகள், அனல் மின்வலு உற்பத்திக்காக ஏற்பட்ட உயர் கிரயம் மற்றும் காற்று மற்றும் ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களிலிருந்தான குறைந்த பங்களிப்புக் காரணமாக இ.மி.ச ஆல் இந் நோக்கத்தை அடைய முடியாதிருந்தது.

மேலும், இ.மி.ச. இன் நீண்டகால உற்பத்தித் திட்டம் மற்றும் பரிமாற்றல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக இ.மி.ச. அவசர மின்வலுக் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தமையால் இ.மி.ச. இன் ஆகக் குறைந்த கிரய நோக்கத்தை மோசமாக பாதித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு 2019 ஆம் ஆண்டிற்கான மின்வலு உற்பத்தி நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| மூலம் | 2019 | 2018 | அதிகரிப்பு /(குறைவு) | |
|---|---|---|---|---|
| ---------- | ----------- | ---------- | ---------------------------------------- | |
| | GWh | GWh | GWh | % |
| நீர்மின் | 4,795 | 6,381 | (1,586) | (25) |
| அனல்மின் | 5,017 | 3,629 | 1,386 | 38 |
| நிலக்கரி | 5,361 | 4,764 | 597 | 13 |
| காற்று | 348 | 326 | 21 | 6 |
| ஏனைய மாற்றலற்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | 220 | 185 | 35 | 19 |
| கூரைக்கு மேலான சூரியசக்தி | 182 | 88 | 94 | 107 |
| **மொத்தம்** | **15,923** | **15,373** | **549** | **4** |

அதற்கமைய, அனல்மின், நிலக்கரி, ஏனைய மாற்றப்படமுடியாத புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் கூரைக்கு மேலான சூரியசக்தி மின்சாரம் என்பன மீளாய்வாண்டில் முறையே 38 சதவீதம், 13 சதவீதம், 19 சதவீதம் மற்றும் 107 சதவீதத்தினால் அதிகரித்திருக்க நாட்டில் நிலவிய பாதகமான காலநிலை காரணமாக நீர் மின்சார உற்பத்தி 25 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

**(ii) நேர்க் கிரயம்**

---------------------

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டிற்கான நேர்க் கிரய மூலப் பகுப்பாய்வு கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | 2019 | | 2018 | |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | சதவீதம் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| எரிபொருள் | 53,216 | 21 | 41,553 | 21 |
| நிலக்கரி | 46,566 | 19 | 38,823 | 20 |
| மின்வலுக் கொள்வனவு | 118,665 | 48 | 84,497 | 44 |
| செயற்பாடு மற்றும் பராமரிப்பு | 16,019 | 6 | 13,812 | 7 |
| பெறுமானத்தேய்வு | 14,281 | 6 | 14,744 | 8 |
| **மொத்த நேர்க் கிரயம்** | **248,747** | **100** | **193,429** | **100** |

மேற்படி தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது நீர்மின்சார உற்பத்தி 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் அதன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டுக்கான மின்வலுக் கொள்வனவுக் கிரயங்கள், நிலக்கரி மற்றும் எரிபொருள் கிரயங்கள் முறையே ரூபா 34,168 மில்லியன், 7,743 மில்லியன் மற்றும் ரூபா 11,663 மில்லியனால் அல்லது 40 சதவீதம், 20 சதவீதம் மற்றும் 28 சதவீததத்தால் அதிகரித்திருந்தன. அதேவேளை, செயற்திட்டங்களின் செயற்பாட்டு மற்றும் பேணுகைக் கிரயங்கள் மீளாய்வாண்டின் போது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அத்துடன், மின்வலுக் கொள்வனவு உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகள் காரணமாக மின்வலு உற்பத்திக்கான நிலையான கிரயங்கள் தவிர்க்க முடியாதவையாக காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டதுடன் இதன் விளைவாக, பொதுமக்களிற்கு குறைந்த கிரயத்தில் மின்சாரத்தை விநியோகிப்பது என்ற இ.மி.ச இன் பிரதான நோக்கத்தை அதனால் அடைய முடியாது போயிருந்தது.

## 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 ஒக்தோபர் 05 இல் உள்ளவாறு ரூபா 95,211,376 பெறுமதியுடைய 4,952.85 மெற்றிக் தொன் நிலக்கரி இருப்பு பற்றாக்குறையாக இருக்கின்றமை இனங்காணப்பட்டுள்ள போதிலும், பொருள் மெய்மையாய்வுக் குழுவொன் றினால் பௌதீக இருப்பு எடுத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இருப்பினும், ரூபா 456,197,162 பெறுமதி யுடைய 28,006.66 மெற்றிக் தொன் மிகை நிலக்கரி இருப்பு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானக் கூற்றிற்கு சீராக்கப்பட்டுள்ளது. ஆகையால், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலக்கரி இருப்பு மீதியின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | தற்போது நிலக்கரி மெய்மையாய்வு நடைமுறை பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் 2020 இற்கான பௌதீக மெய்மையாய்வின் போது கருத்திலெடுக்கப்படும். | இருப்புக்கள் பெறப் படுகையில் அவற் றை அளவிடுவதற் கான நடைமுறை உருவாக்கப்பட வேண்டுமென்பதுடன் ஆண்டின் இறுதி யில் பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) சீஈபீயானது பல வருட ங்களாக மின்சாரத்தை எல்ஈசீஓ (LECO) இற்கு விற்பனை செய்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்கின்ற போதிலும் இவ் இரண்டு நிறுவனங்களிற்கிடையே சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக இவ் இரண்டு தரப்பினர்களுடன் கைச்சாத்திடப்பட்ட விற்பனை மற்றும் கொள்வனவு உடன்ப டிக்கைகள் காணப்படவில்லை. | சட்டத் தீர்வுகளுடன் இரண்டு தரப்பினர்களினதும் உயர்மட்ட உத்தியோக த்தர்களின் பங்குபற்றுதலுடன் இ.மி.ச. இற்கும் லெகோ இற்கும் இடையே மின்சார விற்பனை உடன்படிக்கையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இதுவரையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடன்படிக்கை செய்ய முடியவில்லை. இது தொடர்பாக 2018 யூலை 24 இல் வெளியிடப்பட்ட கடிதத்தின் மூலம் PUCSL இடமிருந்து சில நடவடிக்கைகளை லெகோ கோரியுள்ளது.<br><br>இ.மி.ச. மற்றும் சி.பீ.சீ இற்கு இடையில் எரிபொருள் வழங்கல் உடன்படிக்கையை (FSA) ஆய்வு செய்து வகுப்பதற்கு ஒரு குழுவை இ.மி.ச. இன் உயர் நிர்வாகம் நியமித்துள்ளது. அதன்படி, FSA இனை பூரணப்படுத்துவதற்கு இ.மி.ச மற்றும் இ.மி.ச. இற்கு இடையே பல பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இறுதியாக வரைவு செய்யப்பட்ட FSA இ.மி.ச. இன் பொது முகாமையாளர் ஊடாக அதன் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிறுவனங்களிடையி லான சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வ தற்கு இரண்டு தரப்பினர்களிற்கும் இடையே உடன்ப டிக்கை கைச்சாத்தி டப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) இ.மி.ச இன் வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்ட ங்களை அமுல்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதிகள் காலரீதி யாக பயன்படுத்தப்படாததன் காரணமாக வழங்கப்பட்ட கடன்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் கடனளிக்கும் முகவ ரால் கடப்பாட்டுக் கட்டணங்க ளாக ரூபா 134,447,792 தொகை கழிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணிப்பீடுகள் இன்மை காரணமாக கடப்பாட்டுக் கட்டணங்களின் சரியான தன்மையினை மெய்மையாய்வு செய்ய முடிந்திருக்கவில்லை. | கடப்பாட்டுக் கட்டணங்கள் அனைத்துச் செயற்திட்டங்களிற்கும் பொதுவானவையாக காணப்படுவதுடன், கடன் உடன்படிக்கை களிலுள்ள இறுக்கமான நிபந்தனைகள் காரணமாக செயற்திட்டம் பட்டியலிடப்பட்டு ள்ளவாறு காணப்பட்ட போதிலும் அதனை தவிர்க்க முடியாதுள்ளது.<br><br>கடப்பாட்டு மற்றும் வட்டி கட்டணம் ஆகியவை அட்டவணையின் முதல் மூன்று செயற் திட்டங்களுக்கான கடனின் ஒரு பகுதியாக இல்லாதிருப்பதுடன் திறைசேரியானது அரசா ங்கத்தின் சார்பாக உறுதிப்பாட்டுக் கட்டணங்களைச் செலுத்துகிறது. இ.மி.ச. ஐப் பொறுத்தவரை, திறைசேரியால் அறிவிக்கப்படும் வரை இதுபோன்ற உறுதிப்பாட்டுக் கட்டணங்களை பதிவுசெய்யும் நிலையில் நாங்கள் இல்லை. எனவே, திறைசேரியிலிருந்து தகவல்களைப் பெறாமல் புள்ளிவிவரங்களை சரிபார்க்க முடியாதுள்ளது.<br><br>மீதமுள்ள செயற்திட்டங்களுக்கு, ஈஆர்டி அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுத்த பின்பு கணக்குகளின் புத்தகங்களில் உறுதிப்பாட்டுக் கட்டணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கடப்பாட்டுக் கட்டணம் இந்த திட்டங்களுக்கான கடனின் ஒரு பகுதியாக இருப்பதுடன் கடன் வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படுவது ஈஆர்டி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது. இருப்பினும், செயற்திட்ட பிரிவு கணக்குகளில் காட்டப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் சில செயற்திட்டங்களுக்கான கணக்காய்வாளர்களின் புள்ளிவிவரங்களுடன் இணைக்கப்படவில்லை என்பது கவனிக்க ப்பட்டது. சில செயற்திட்டங்கள் பல தவணை மற்றும் பகுதிகளைக் கொண்டிருப்பதாலும், இ.மி.ச. இன் வெவ்வேறு பிரிவுகளால் வெவ்வேறு பிரிவுகள் / கிளைகளால் கையாளப்படுவதாலும் இது ஏற்பட்டு இருக்கலாம். எனவே கணக்காய்வாளரால் காட்டப்படும் புள்ளிவிவரங்கள் செயற் திட்டங்களின் வெவ்வேறு பகுதிகளை இணைக்கும் மொத்த திரட்டப்பட்ட தொகையாக இருக்கலாம். | மேலதிக கடப்பாட்டுக் கட்டணம் செலுத்தப் படுவதனை தவிர்ப்பதற்காக திட்மிடப்பட்டவாறு செயற்திட்டப் பணிகள் மேற்கொள் ளப்படுதல் வேண்டும். |
| (ஈ)நீண்ட கால மின்பிறப்பாக்க விரிவாக்கத் திட்டம் 2018 – 2037 இன் படி, 370 MW அனல் மின்வலு மற்றும் 287 MW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இனை உள்ளடக்கிய 657 MW புதிய | கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக முன்மொழியப்பட்டிருந்த மின் உற்பத்தி நிலையங்கள் தாமதமாகிவிட்டன.<br><br>• மேற்கு பிராந்திய எல்.என்.ஜி ஒருங்கிணைந்த சுழற்சி மின் நிலையம். | ஆகக் குறைந்த கிரயம் என்ற குறிக் கோளை அடைந்து கொள்வதற்காக இழிவுக் கிரய நீண்ட கால மின்பிறப்பா க்கல் திட்டத்துடன் |

மின்பிறப்பாக்கம் தேசிய மின்சார முறைமைக்குச் சேர்க்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மேற்படி திட்டத்தில் உள்ளடங்கியிருக் காத 222 MW அனல் மின்வலு மற்றும் 25.25 MW புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மீளாய்வாண்டில் முறைமைக்குச் சேர்க்கப்பட் டிருந்தது. அதன் விளைவாக, ரூபா 22.2 பில்லியன் பெறுமதி யான 735 Ghw எரிசக்தி அவசரக் கொள்வனவாக மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

முதலில், நீதிமன்ற வழக்கு காரணமாக தாமதமானது.

2020 பெப்ரவரியில் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டதுடன் LOI ஒன்றை வழங்குவதற்கும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் லக்தனவி லிமிடெட் உடன் மின்வலு கொள்வனவு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் இ.மி.ச. இற்கு அனுமதி வழங்கப்பட்டது. திட்டக் குழு, லக்தனவி லிமிடெட் உடன் கலந்துரையாடி அதன் அறிக்கையை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சி.ஏ.என்.சி. இற்கும் சமர்ப்பித்தது. இந்த ஆவணம் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு, குழுவின் அறிக்கை மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- எரிவாயு விசையாழிகள்

  கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை பரிசீலித்த பின்னர் நிதியைப் பாதுகாக்குமாறு SCAPC, இ.மி.ச. இனை (22.04.2020 அன்று) கேட்டுக்கொண்டதுடன் அதற்கமைய கொள்வனவு குறித்து முடிவெடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

- உமா ஓயா எச்பிபி

  கட்டுமானத்தின் போது ஏற்பட்ட சிக்கல்கள் (அழுத்தம் சுரங்கப்பாதையில் நீர் நுழைதல்) மற்றும் சமூக பிரச்சினைகள் காரணமாக திட்டம் தாமதமானது. இந்த திட்டம் மஹாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் வருகின்றது. தற்போதைய மதிப்பீடுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் மின் உற்பத்தி நிலையம் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- காற்றாலை மின் நிலையங்கள்

  கேள்வி கோரல் மற்றும் கேள்வி கையளித்தல் தாமதம் காரணமாக கட்டுமானம் தாமதமடைந்துள்ளது.

இ.மி.ச இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

மின் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக, கீழே விபரிக்கப் பட்டுள்ளபடி பின்வரும் மின் உற்பத்தி நிலையங்கள் குறித்துரைத்த அங்கீகாரங்களுடன் இயங்குகின்றன.

- பாரிய மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படுத்தப்படும் வரை உலை எண்ணெய் எரி மின் உற்பத்தி நிலையங்கள்.

  2019 ஆம் ஆண்டின் மின்சார தேவை தேவையை பூர்த்தி செய்ய குறுகிய கால குறைநிரப்பு மின்வலுவாக 100 மெகாவாட் இயலளவு கொள்வனவு செய்யப்பட்டது. அமைச்சரவை விஞ்ஞாபனம் இல. 19/0173/113/001 இற்கு அமைய 2019-01-14 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மின் உற்பத்தி நிலையங்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 5.06 பில்லியன் கிரயத்தில் 142.13 GWh மின்வலுவை உற்பத்தி செய்தன.

- மின்சாரத் தேவையை பூர்த்தி செய்வதற்காக ஏசிஇ பவர் மாத்தறை, ஏசிஇ எம்பிலிபிடிய மற்றும் ஏசியா பவர் என்பவற்றுடனான காலாவதியான மின்வலு கொள்வனவு உடன் படிக்கைகள் 2021 ஆம் ஆண்டு வரை கால நீடிப்புச் செய்யப்பட்டன. அமைச்சரவை விஞ்ஞாபனம் இல. 18/0525/727/014 / TBR இன் படி 2018-03-27 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்த மூன்று மின் உற்பத்தி நிலையங்களும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 17.15 பில்லியன் கிரயத்தில் 592.86 GWh மின்வலுவை உற்பத்தி செய்தன.

(உ) 2017 ஏப்ரல் உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக் குறை தொடர்பாக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் விசேட புலனாய்வு மேற்கொள்ளப் பட்டிருந்தது. எனினும் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் ரூபா 39,551,696 தொகையில் ரூபா 2,510,056 பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**உதுறுவசந்தய செயற்திட்டத்தின் கீழ் 2014 இல் இனங்காணப்பட்ட ரூபா 39,551,696 இருப்பு பற்றாக்குறை.**

மேற்கூறிய ரூபா 39,551,696 தொகையில் முறையே இருப்புப் பற்றாக்குறைகளான - ரூபா 2,510,056 மற்றும் ரூபா 37,041,640 ஆகிய இரு மீதிகள் உள்ளடங்கியுள்ளன.

**இருப்புப் பற்றாக்குறை ரூபா 2,510,056**

டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2017.05.04 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம்

மோசடி தொடர்பான விசாரணை கணிசமான காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் இ.மி.ச இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக விசாரணை அறிக்கை மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேலும், இது தொடர்பில் 2015 இல் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் மற்றொரு உத்தியோகத்தருக்கு எதிராக திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக் கொன்று (வழக்கு இல. பீ/1164/15) தொடரப்பட்டிருந்தது. மேலும் நீதிமன்ற வழக்கின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

குழுவொன்றை நியமித்திருந்ததுடன் அக்குழுவின் அறிக்கை 2019.10.03 ஆந் திகதி டிஜிஎம் (வட மாகாணம்) இற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, களஞ்சியக் காப்பாளரான திரு. ஜே. எம். அசங்க ஜெயகொடி (பி.எப். இலக்கம் 37432) இடமிருந்து இருப்புப் பற்றாக்குறையான ரூபா 2,510,056.88 (சபைக் கட்டணம் உள்ளடங்கலாக) இனை அறவிடுமாறு டிஜிஎம் (வட மாகாணம்) அவரது 2019.10.09 ஆந் திகதிய NP/DGM/HRO/விசாரணை ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அறிவுறுத்தியிருந்தார். களஞ்சியக் காப்பாளர் 2019 ஒக்தோபரில் டிஜிஎம் (என்சிபி) க்கு இடமாற்றப்பட்டிருந்ததுடன் அவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மீதி (ரூபா 2.5 மில்லியன்) ஏனைய பெறத்தக்கவைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஏஜிஎம் (டிடி 1) தனது 2019-11-28 ஆந் திகதிய DGM/(C&C)/DD1/ HRO/ADMN/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார். ஆயினும், திரு ஜெயகொடி அவரது 2020-01-06 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முறையான விசாரணையை நடத்துமாறு கோரியிருந்ததுடன் அதன்படி குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், முறையான விசாரணை முடிவுக்கு அமைய 180 தவணைகளில் இதனை அறிவிடுமாறு ஏஜிஎம் (டிடி1) தனது 2010.09.03 ஆந் திகதிய AGM(DD1)/DGM/(C&C)/D1/162 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் இந்த தொகையை ஊழியரிடமிருந்து வசூலிக்க அறிவுறுத்தியிருந்தார்.

**இருப்புப் பற்றாக்குறை ரூபா 37,041,640**

பொருட்களை வழங்காது மோசடி செய்தமைக்காக 25 சதவீத சபைக் கட்டணம் உட்பட ரூபா 22,584,800 இனை வரையறுத்த ரிச்சர்ட்சன் ப்ராஜெக்ட்ஸ் (தனியார்) இடமிருந்து அறவிடுவதற்காக அக்கம்பனிக்கு இ.மி.ச. இன் சட்ட உத்தியோகத்தர் கோரிக்கையொன்றை அனுப்பியுள்ளார். அத்துடன், இருப்புப் பொருட்களின் இழப்புச் சீராக்கத்திற்கான எந்தவொரு மாற்றத்தையும் இனங்காண்பதற்காக மேலதிக இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, சில சீராக்கங்களை செய்தபின்னர் இழப்பின் அளவு ரூபா 8.3 மில்லியனாக

| | | |
|---|---|---|
| | குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, உள்ளக விசாரணை பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி களஞ்சியக் காப்பாளரான திரு உ.பி. உதரா குணரத்ன (பிளப் இல. 37475) மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், திருகோணமலை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் B/1164/15 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. | |
| (ஊ) 2006 நவம்பர் 20 தொடக்கம் 2012 பெப்ரவரி 20 வரையான காலப்பகுதியின் போது சொத்து முகாமைத்துவப் பிரிவில் (மின்வலுப் பொறி) ஏற்பட்டிருந்த ரூபா 3,674,861 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக முறையான புலனாய்வு முடிவடைந்திருந்த போதிலும் அந்த நபருக்கு எதிராக 2018 ஆகஸ்ட் 16 வரை சபையால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அதே ஊழியர் இன்னொரு அலுவலகத்தில் மோசடியொன்றில் ஈடுபட்டிருந்ததுடன் மோசடிப் பெறுமதியாக ரூபா 99,155 அறவிடப்பட்ட பின்னர் அவரது வேலை முடிவுறுத்தப்பட்டிருந்தது. | இருப்புப் பற்றாக்குறை விடயத்தை புலனாய்வு செய்வதற்காக மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) இனால் ஒரு புதிய குழு நியமிக்கப் பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | மோசடி தொடர்பான விசாரணை கணிசமான காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் இ.மி.ச இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக விசாரணை அறிக்கை மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) புலனாய்விற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்டவாறு நட்டம் அறவிடப்படாமல் ரூபா 3,789,893 இருப்பு பற்றாக்குறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் 2011 ஒக்தோபர் 15 இல் ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்கப் பட்டிருந்தார். மேலும் மேற்படி பொருண்மையான தொகையினை சீராக்குவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமல் கணக்குப் புத்தகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரை ஓய்வு பெறுவதற்கு அனுமதித்திருந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காது இந்தத் தொகையினை பதிவழிக்கும் செயற்பாட்டில் சபை ஈடுபட்டுள்ளது. | இருப்புப் பற்றாக்குறை விடயத்தை புலனாய்வு செய்வதற்காக மேலதிகப் பொது முகாமையாளர் (சொத்து முகாமைத்துவம்) இனால் ஒரு புதிய குழு நியமிக்கப் பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும். | மோசடி தொடர்பான விசாரணை கணிசமான காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் இ.மி.ச இற்கு ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக விசாரணை அறிக்கை மீது உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இ.மி.ச. இன் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டம் (எஸ்ஓஆர்) நீண்டகாலமாக நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் கனிஷ்ட நிறைவேற்றுநர்களுடன் தொடர் புடைய இ.மி.ச. இன் இரண்டு தொகுதிகள் ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஊழியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் மதிப்பாய்வு செய்யப்பட்டுவருவதுடன் அவை விரைவில் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும். | ஆட்சேர்ப்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மனித வளப் பிரிவிலுள்ள பிரதான பதவியாக பிரதிப் பொது முகாமை யாளர் (ஆளணி) உள்ள போதிலும் அப்பதவிக்கு தேவையான தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் (எல்ஓஆர்) குறித்துரைக்கப் பட்டிருக்காததுடன் ஏனைய சேவைகளான விசேடமாக மின் பொறியியலாளர்களிற்கு இப் பதவிகளை பெற்றுக்கொள்வது இயலுமான விதத்தில் இது வைக்கப்பட்டிருந்தது. | முக்கிய பதவிகளிற்குத் தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், டி.ஜி.எம் (பீ) பதவிக்கு - முதலாம் வகுப்பு மனிதவள அல்லது வணிக நிர்வாக துறைகளில் முதுகலை பட்டம் பெற்றுள்ள மின்னியல் பொறியியலாளர்களே தெரிவு செய்யப்படுகின்றனர். | பிரிவுத் தலைவரின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் ஆட்சே ர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (இ) தற்போதுள்ள எஸ்ஓஆர் இன் பிரகாரம், மொத்த மனிதவள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) பதவியணியில் 50 சதவீத மானவை வெளியிலிருந்து நிரப்பப்படுவதுடன் அந்த சதவீதத்தை ஆண்டிற்கு ஆண்டு படிப்படியாக 85 சதவீதம் வரை அதிகரிப்பதற்கு திட்டமிட ப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இ.மி.ச இன் வரலாற்றில் இரண்டு பொறியியலாளர்கள் பிரிவுத் தலைவர்களின் தொழிற்பாடுகளை நீண்டகாலமாக மேவுகை செய்திருந்ததால் பதவியுயர்வுத் திட்டத்தில் அவ்வாறு வெளி வாரியாக ஆட்சேர்ப்புச் செய்ய ப்பட்ட ஊழியர்களிற்கு தெளிவான பதவியுயர்த்தல் முறைமையொன்று அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. | தரப்பட்டுள்ள பரிந்துரைக்கு இடமளிப் பதற்காக, தற்போது விவாதத்தில் உள்ள ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தில் இ.மி.ச. பாரிய கட்டமைப்பு மாற்றங்களை செய்தல் வேண்டும். | வெளிவாரியாக ஆட் சேர்க்கப்பட்ட ஊழியர் களிற்கு தெளிவான பதவியுயர்வு முறையி னைக் காட்டும் விதத் தில் ஆட்சேர்ப்புத் திட்டம் திருத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) மனித வள முகாமையாளர் (எச்ஆர்எம்) மற்றும் மனித வள உத்தியோகத்தர் (எச்ஆர்ஓ) நேரடி யாக ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற் குத் தேவையான அனுபவமானது 100 ஊழியர்களிற்கு மேற்பட்ட நிறுவன மொன்றில் மனித வளத் துறையில் 06 ஆண்டுகளாக | தரப்பட்டுள்ள பரிந்துரை சிரேஷ்ட நிறைவேற்றுநர்களின் புதிய ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இது ஏற்கனவே பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திருத்திய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு உடனடி யாக அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளமை இ.மி.ச இல் கையாளப்பட வேண்டிய பதவியணிப் பலத்துடன் ஒப்பிடும் போது அது போதுமானதாக காணப்படவில்லை. | | |
| (உ) | சட்டத் திணைக்களத்திலுள்ள தலைமைச் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 யூன் 04 முதல் வெற்றிடமாகக் காணப்பட்டு வருகின்றது. | வெளிப்புற ஆட்சேர்ப்பு அடிப்படையில் பொருத்தமான சி.எல்.ஓ ஐ நியமிக்க பணிப்பாளர் சபை முடிவு செய்துள்ளதுடன் தற்போது தொடர்புடைய பணிகள் இடம்பெற்று வருகின்றன. | நிறுவனத்தின் செயற் பாடுகளை வினைத்திற னாகவும் பயனுறுதியா கவும் பேணிச் செல்வ தற்கு பிரதான பதவி வெற்றிடங்கள் குறுகிய காலத்தில் நிரப்பப்ப டுதல் வேண்டும். |